# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 36
விலை ரூபாய் 20.00

தீபம்–37
மாசி இதழ்–2017 ,ஆரம்பம் 15 மாசி–2013.



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


**ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர் (தி.பா 103 : 8)**



## ஆயரின் செய்தி

கடந்தமாதம் திருமலைதீபம் பத்திரிகையில் இவ் ஆண்டுக்கான எமது மேய்ப்புப்பணி திருமடல் மூலம் பல விடயங்களை அறிந்திருப்பீர்கள். மூன்று தலைப்புக்களை இவ்வருடம் நாம் அறிவித்துள்ளோம். தூயயோசேப் வாஸ் ஆண்டு, தூய மத்தேயு நற்செய்தி ஆண்டு, குடும்ப நற்பணிகள் ஆண்டு. இதன் பின்னணியில் மறைமாவட்ட ரீதியிலும் பங்குரீதியிலும் பலதிட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகின்றோம். தைமாதம் 16ம் திகதி தூயயோசேப் வாஸ் திருவிழா. அவர் இறந்ததினம். இந்த சிறப்பான நாளை நாம் மையப்படுத்தி மூதூர் பங்கில் அமைந்துள்ள வேதத் தீவில் தூய யோசேப் வாஸ் பெயரில் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. தூய யோசேப் வாஸ், மத்தேயு நற்செய்தி, குடும்பப் பணிகள் பற்றி அனைத்து நிலைகளிலுமுள்ள விசுவாசிகள் ஆழமான அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்பது எமது நோக்கமாகும். திருமலைத் தீபத்திலும் இதுபற்றிய பலவிடயங்களை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இம்மாதம் தூயயோசேப் வாஸ் கொண்டிருந்த மறைபணி ஆர்வத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். யோசேப் வாஸ் சிறுவயது முதலே செபத்திலும் ஆன்மீகத்திலும் உறுதியாக இருந்தார். சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் இவர் தனது சிறிய கிராமத்தில் இருந்த ஆலயத்திற்குச் சென்று செபிப்பதுண்டு. அதிகாலையிலேயே இவர் ஆலயத்திற்குச் செல்வதால் ஆலயத்தின் பெரிய கதவுகளைத் திறந்துவிடயாரும் இருப்பதில்லை.

சிறுவனாக இவராலும் பெரியகதவுகளைத் திறந்து விடமுடியாது. ஆனால் இவர் செல்லும் போது கதவுகள் தானாகவே திறப்பதை மக்கள் பார்த்திருக் கிறார்கள். வானதூதர்கள் தான் கதவுகளை யோசேப் வாஸ் எனும் சிறுவனுக்காகத் திறந்து விடுகிறார்கள் என மக்களும் நம்பினார்கள். இவ்வாறு யோசேப் வாஸ் தனது செபவாழ்வில் நாளாந்தம் உறுதியாக வளர்ந்தார். செபத்திலும் புனிதத்திலும் வளரவளர அவருக்கு கடவுளுக்காகத் தன்னை அர்ப்பணித்து பணிசெய்ய வேண்டும் எனும் ஆவலும் வளர்ந்தது. வளர்ந்து குருவாகதன் பணி தொடர்ந்தாலும் ஆண்டவரால் விதைக்கப்பட்ட விதை அவருள் வளர்ந்த வண்ணமே இருந்தது. இலங்கைத் தீவில் கத்தோலிக்கர் ஒல்லாந்தரால் கொடுமைப்படுத்தப்பட்டு தமது விசுவாசத்தை பகிரங்கமாக வாழ்ந்துகாட்ட முடியாமலும், விசுவாசத்தை கட்டியெழுப்ப முடியாமலும் தவித்தனர். விசேடமாக திருப்பலி மற்றும் அருட் சாதனங்களை நிறைவேற்ற குருக்கள் இல்லாமல் மிகவும் துன்பப்பட்டனர். இதை நன்கு அறிந்தயோசேப்வாஸ் மனதில் பெரும் ஏக்கம். கோவாவில் பணி செய்ய பல குருக்கள் உள்ளனர். ஆனால் இலங்கைத் தீவில் வாழும் கத்தோலிக்கரின் விசுவாசம் அணைந்து போகா வண்ணம் தான் அங்கு சென்று பணிசெய்ய வேண்டும் என இறைவனிடம் தொடர்ச்சியாக செபித்து வந்தார். தனது மேலாளரிடம் கோரிக்கை விடுத்தார். யோசேப் வாஸ் விரும்பியபடி அவருக்கு அனுமதி கிடைக்க பிச்சைக்காரரைப் போல இலங்கை வந்தடைந்தார். பயணக்களைப்பு, நோய், ஆபத்துக்கள் எதுவும் அவரைத் தடுக்க முடியவில்லை. மக்களைத் தேடி, கத்தோலிக்கரை இனம் கண்டு, தன்னை அறிமுகம் செய்து அவர்களுக்குப் பணியாற்றினார். பலவருடங்களாக வேறு குருக்களின் உதவியின்றி பணிசெய்தார். ஆன்மீகதாகத்தோடு இருந்த மக்களின் தேவைகளை யோசேப் வாஸ் நிறைவேற்றினார். பகலிலே பிச்சையெடுப்பது போன்று ஊருக்குள் சென்று கிறிஸ்தவர்களை இனம் காண்பதும் இரவில் அவர்களுக்குத் திருப்பலி நிறைவேற்றுவதும், நற்கருணை கொண்டு செல்வதும் இவர் விரும்பி அர்ப்பணித்த பணியாகும். குருக்கள் இல்லாத நிலையில் முக்கிய கிறிஸ்தவ கடமைகளை நிறைவேற்ற கிறிஸ்தவர் மத்தியில் மூப்பர்களை உருவாக்கினார். மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மகாகல்கமுவ, சிலாபம், கண்டி என்று இலங்கையில் பலபகுதிகளுக்கும் கால்நடையாகவே சென்றுபணி செய்துள்ளார். இக்காலத்தில் இவர் கண்டியில் சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆண்டவரும் யோசேப் வாஸ் முனிவரின் விசுவாசத்தையும், பணியையும். ஆன்மாக்கள் மீது அவர் கொண்டிருந்த ஆர்வத்தையும் பார்த்து பல புதுமைகள் செய்யும் ஆற்றலையும் கொடுத்திருந்தார். ஆன்மாவைத் தேடிகால நடையாக, ஆபத்துக்களையும் எதிர்கொண்டு விபரிக்க முடியாத பேரார்வம் கொண்டு மக்களைத் தேடிச் சென்று பணிசெய்த தூயயோசேப் வாஸ் இன்று குருக்களுக்கும் துறவறத்தவர்க்கும் பெரும் சவால். தூய யோசேப் வாஸ் முனிவரின் அர்ப்பணம், இறைவனில் நம்பிக்கை, பணிவு, மக்களைத் தேடிச் செல்லும் ஆர்வம் இன்று எம்மில் எவ்வளவு உள்ளது என்பதை நாமே சோதித்துப் பார்க்க வேண்டும். அதேபோல ஒல்லாந்தர் காலத்து கொடுமைகளையும் சகித்துக் கொண்டு, பகிரங்கமாக தமது விசுவாசத்தை வாழ்ந்து காட்டமுடியாத நிலையிலும், அருட்சாதனங்களை நிறைவேற்ற பலவருடங்களாக குருக்கள் இல்லாத சூழ்நிலையிலும் ஆண்டவரில் தமது பற்றையும், குடும்பமாக செபிப்பதையும் விட்டுவிடாமல் நம்பிக்கையோடு தமது விசுவாசத்தை வாழ்ந்து காட்டிய கத்தோலிக்கர் இன்று பொது நிலையினராகிய ஒவ்வொருவருக்கும் பெரும் சவால். சிறிய விடயத்திற்கும் கத்தோலிக்க திருச்சபையை விட்டுவிட்டு சபைகளுக்கு செல்பவர்களும், தம்பெயர், புகழ், பதவிகளை நாடுபவர்களும், எப்படியும் வாழலாம் எனும் பணப்போக்கை உடையவர்களும் 17ம் நூற்றாண்டில் ஒல்லாந்தரின் பிடியில் வாழ்ந்த கத்தோலிக்க விசுவாசிகளிடம் பலவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

தொடர்ச்சி 2ம் பக்கம்........


## இயேசுவோடு 24 மணி நேரம்

### விசேட நற்கருணை ஆராதனை



இடம் : அனைத்து பங்குகளிலும்
காலம் : 24-25 மார்ச் 2017
(வெள்ளி, சனி கிழமைகளில்)
நேரம் : பிற்பகல் 06 மணிமுதல்
மறு நாள் பிற்பகல் 06 மணி வரை

திருகோணமலை மறைமாவட்டத்
திருச்சபையாக செபத்தில் இணைந்திடுவோம்.


## அமல மரித் தியாகிகள் சபையின் கொழும்பு மாகாண புதிய தலைவர்



அமலமரித் தியாகிகள் துறவற சபையின் கொழும்பு மாகாணத்திற்குப் புதிய தலைவராக அருட்பணி இர்வின் மொறாயஸ் அ.ம.தி. தெரிவு செய்யப் பட்டுள்ளார். புதிய மாகாணத் தலைவரும் அவரோடு இணைந்து செயல்படவிருக்கும் ஆலோசனைசபைக் குருக்களும் இம்மாதம் 17ம் திகதி தம்பணியைப் பொறுப்பேற்றனர். புதிய மாகாணத் தலைவருக்கும் ஆலோசனை சபைக் குருக்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

எமது மறைமாவட்டத்தில் குச்சவெளிப் பங்கைப் பராமரிக்கும் அருட்பணி இயேசு ரமேஸ் அ.ம.தி கொழும்பு மாகாணத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய மறைப்பணியாளர்களை இணைத்துக் கொள்ளல்

2017ஆம் ஆண்டு மறைப்பாடசாலைக்கு புதிய மறைப்பணியாளரை சேர்த்-துக்கொள்ளும் போது பின்வரும் விடயங்களை கருத்திற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. கா.பொ.த சா/த பரீட்சையில் (O/L) கத்தோலிக்க திருமறையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2. எமது மறைக்கல்வி பணியகத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை நிரப்பி பங்குத்தந்தையின் அனுமதியோடு உறுதி செய்து மறைக்கல்வி பணியகத்திற்கு அனுப்பி வைத்தல்.

3. எமது மறைக்கல்வி நடுநிலையத்தினால் புதிய மறைப்பணியாளருக்காக ஏற்பாடு செய்கின்ற ஒரு நாள் கருத்தரங்கிற்கு தவறாது பங்கு பற்றுவதோடு எமது பணியகத்தினால் நடாத்தும் விசேட பரீட்சையை எழுதி சித்திபெறும் ஆசிரியர்கள் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கான சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும். இந்த பரீட்சையில் சித்தி பெறாத மறையாசிரியர்கள் மறைக்கல்வி நடுநிலையத்தால் பதிவு செய்யப்பட மாட்டார்கள்.

மேற்கூறப்பட்ட விதிமுறைகளை பின்பற்றாத மறைப்பணியாளர்களுக்கு மறைமாவட்ட கிறிஸ்தவ அமைச்சினால் வழங்கப்படும் கொடுப்பனவு, மற்றும் சீருடைகள் வழங்கப்படமாட்டாது.

**ஆண்டர் தம் மக்களுக்கு சமாதானம் அருள்வாராக (தி.பா 29:11)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு பேசுகிறேன்..

**அருட்பணி N.C அருள்வரதன்**

புதிய வருடத்தின் இரண்டாவது மாதத்திற்குள் வந்து விட்டோம். மீண்டும் உங்களோடு பேச எனக்கொரு வாய்ப்பு, பெருமகிழ்வே. **“தையும் மாசியும் வையகத்துறங்கு”** என்று கூறப்பட்டுள்ளது. இருந்தாலும், காலம் கடந்துவிட்ட அல்லது காலத்தை மீறிய மழையும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களும் தாக்கங்களும் குறிப்பிடப்பட வேண்டியதே.

ஆன்மீக நிலைகளைப் பார்த்தால் இம்மாதம் இரண்டாம் திகதி இயேசுவைக் காணிக்கை கொடுத்த நாளாக கொண்டாடுகின்றோம். தூய லூர்து அன்னையின் விழாவை பதினொராம் திகதியும் இருபத்தி ரெண்டில் தூய பேதுருவின் விழாவையும் கொண்டாடுகின்றோம். விழாக்களை கொண்டாடும் அனைத்து மக்களுக்கும் எமது வாழ்த்துக்கள். மேலும் உவர்மலை ஆலய விழாவை கொண்டாடும் பங்கு மக்களுக்கும் பங்குத்தந்தைக்கும் எமது நல்வாழ்த்துக்கள்.

இம்மாதம் நான்காம் திகதி இலங்கையின் அறுபத்தொன்பதாவது சுதந்திர தினமாகும். இந்நாளைக் கொண்டாடும் நாம் அனைவரும் பேதங்கள் வேறுபாடு எதுவுமற்ற நிலைகளிலே உறவோடு வாழ்வோம் என்னும் நல்லுணர்வோடு ஒன்றுபட்டு வாழவேண்டுமென்று இறைவனை வேண்டி நிற்போம்.

மேலும் இம்மாதத்திலே நம்மோடு வாழ்ந்து இறைபணியாற்றி மறைந்த ஆயர் கஸ்ரன் றொபிசே ஆண்டகையும் மற்றும் அருட்பணியாளர் டெல்மாமல் சந்தியாகு மரியான் இவர்களையும் நன்றியோடு நினைவு கூர்ந்து அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவோம்.

இம்மாதம் இருபத்தி நான்காம் திகதி மகாசிவராத்திரி தினமாகும். அனைத்து இந்து மக்களுக்கும் எமது நல்வாழ்த்துக்கள் இருபத்தெட்டாம் திகதி அறிவியற் தினமாகும். இது மிகவும் வேண்டப்பட்டதாகும். இதன் குறைபாடுகளே பலதரப்பட்ட குறைபாடுகளுக்கும் பின்னடைவுகளுக்கும் அடித்தளமிடுகின்றன. எது எப்படி இருந்தாலும் அறிவின் நிலைகளை குறைய விடாமல் ஒவ்வொருவரும் வளமூட்ட வேண்டுமென்பதே இந்நாளுக்காக நாம் தரும் செய்தியாகும்.

நாட்டின் அரசில் நிலைகளை நோக்கும்போது பல நிலைகளிலே சிந்திக்க வேண்டி உள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியினை ஆட்டம் காண வைக்குமளவிற்கு பல அரசியல் வாதிகள் முனைகிறார்கள்.

அமைதியாக ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்கு தடையாக பல செய்பாடுகளும், பிற்போக்கான எண்ணங்களும் குவிக்கப்பட்ட வண்ணமிருக்கின்றன.

மக்களின் அங்கீகாரம் பெற்று நடைபோடும் ஆட்சியை வீழ்த்துவதற்கு முனைவது முறையற்ற செயலாகும். நீதி அமைதி சமாதானம் என்பவற்றை உள்வாங்கி நகரும் ஆட்சி தீமைகளைப் பொருட்படுத்த மாட்டாது நன்மைகளைக் காட்ட வேண்டுமென்று இறைவனை வேண்டி மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கிறேன்.

1ம் பக்கத் தொடர்ச்சி......

தூய யோசேப் வாஸ் முனிவரின் பணிசெய்யும் ஆர்வம், ஆன்மாக்களைத் தேடிச்செல்லும் வேகம் எமக்கும் வரவேண்டும். பணிந்து, இயேசுவின் புகழ் ஓங்க எம்மை அர்ப்பணிப்போம்.

இம்மாதம் 11ம் திகதி செல்வநாயகபுரத்தில் நடைபெற்ற 12 மணிநேர நற்கருணை ஆராதனை சிறப்பாக நடைபெற வேண்டிய ஒழுங்குகளைச் செய்த பங்குத் தந்தைக்கும் பங்கு மக்களுக்கும். வருகை தந்த குருக்கள், துறவறத்தவர், ஏனைய பங்குகளிலிருந்து வருகைதந்த இறை மக்களுக்கும் எமது பாராட்டுக்கள். ஒரே மறைமாவட்டமாக ஆன்மீகத்தில் ஒன்றுபடவும் வளரவும் அமையும் இந்த சிறப்பான சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்வோம். மேலும் மார்ச் மாதம் 24ம் 25ம் திகதிகளில் கடந்தவருடம் நடைபெற்றது போல் 24 மணிநேர நற்கருணை ஆராதனை (“ஆண்டவரோடு 24 மணிநேரம்”) அனைத்து ஆலயங்களிலும் நடைபெறும். தொடர்ந்து இறைவனில் இணைந்திடுவோம்.


மார்ச் 1ம் திகதி விபூதிப்புதனோடு தவக்காலம் ஆரம்பமாகிறது. மீண்டும் ஒருதவக்காலம் என காலத்தைக் கடத்தாமல் எமது மனமாற்றத்திற்கும் புது வாழ்விற்கும் இக்காலத்தை முழுமையாகப் பயன்படுத்துவோம்.

**இறைவன் என்றும் உங்களை ஆசீர்வதிப்பாராக.**

**கிறிஸ்துவில்,**

**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

# மாதம் ஒருபுதுமை




## தூய பிரான்சிஸ் சவேரியார்

தூய பிரான்சிஸ் சவேரியார் 16ம் நூற்றாண்டில் வாழ்ந்த இயேசு சபை மிஷனரி. யப்பான் தேசத்து அப்போஸ்தலர் என அழைக்கப்பட்டவர். ஆசியாவில் மறைபணிக்கான அழைப்பை ஏற்று இந்தியா, இலங்கை, வங்கதேசம், மலாக்கா, சீனா, யப்பான் போன்ற நாடுகளில் பணியாற்றியவர்.

இவர் ஒரு தடவை தென் இந்தியாவின் துறைமுக நகரான கன்னியாகுமரிக்கு வந்தார். இங்கு கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ மறைக்கே அவப்பெயர் வருமளவிற்கு வாழ்ந்தார்கள். தூய சவேரியார் போர்த்துக்கேய ஆலயத்தில் போதித்தார். மக்களோ எவ்வித ஆர்வமும் காட்டாமல் இருந்தனர்.

இதற்கு முதல் நாள் அந்த ஆலயத்தில் இறந்த ஒரு மனிதனின் அடக்கம் நடைபெற்றிருந்தது. தூயசவேரியார் தனது போதனையை நிறுத்திவிட்டு செபித்தார். இறைவன் கடின மனதுடைய இம்மக்களின் உள்ளங்களை இளகச் செய்ய வேண்டுமென உருக்கமாக செபித்தார். பின் அடக்கம் செய்யப்பட்டவரின் புதை குழியைத் தோண்டும் படி அங்கிருந்த சிலருக்குக் கூறினார். மீண்டும் கண்ணீரோடு உருக்கமாக செபித்த தூய சவேரியார் “உங்களை மனம்மாற்ற இறந்தவரை உயிர்ப்பிக்கவும் கடவுள் இரக்கமாக உள்ளார்” என்று அங்கு கூடியிருந்த மக்களிடம் கூறினார்.

துணிகளால் பலமுறை சுற்றப்பட்ட இறந்தவரின் உடலை மேலேகொண்டு வந்தபோது நாற்றம் அடித்தது. உடலும் அழுகத் தொடங்கியிருந்தது. மக்களும் இதை உன்னிப்பாக அவதானிக்க வேண்டுமென கட்டளையிட்டார். பின் தூய சவேரியார் முழந்தாற்படியிட்டு, செபித்து, பின் உயிர்வாழும் கடவுளின் பெயரால் எழுந்திருக்க இறந்தவருக்குக் கட்டளையிட்டார். அம்மனிதரோ அந்த நிமிடமே உயிர்பெற்று எழுந்தார். பூரண சுகத்துடனும் காணப்பட்டார். மக்களுக்கோ ஆச்சரியம். பலர் புனிதரின் காலடிகளில் விழுந்து திருமுழுக்குக் கேட்டனர். ஏனைய கிறிஸ்தவர்கள் உண்மையான மனமாற்றம் பெற்றனர்.



# தூய பேதுருவின் தலைமை பீடம்

ஆண்டவர் இயேசு திறவு கோல்களின் அதிகாரத்தைப் பேதுருவிடம் ஒப்படைத்தார் இவ்வாறு பேதுரு பெருமை படுத்தப் பட்டதை நினைவு படுத்தவே இந்தத் திருநாள் கி.பி. 354 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. இத்திருநாளைக் கொண்டாடுவதன் மூலம் பேதுருவுக்கு நாம் வணக்கம் செலுத்துகிறோம். இறைவனின் சிறந்த பேணுதலால் அவர் திருச்சபையின் தலைவராக நியமனம் பெற்றார் எனவும் நினைவு கூர்கிறோம். எல்லாத் திருத்தந்தையர்களும் பேதுருவின் வழித் தோன்றல்கள். எனவே அவர்கள் கிறிஸ்து ஏற்படுத்திய ஒரே திருச்சபையின் தலைவர்கள். இவர்களனைவரும் கிறிஸ்துவின் போதனைகளை நமக்கு கற்றுக் கொடுக்கின்றனர்.

**“காத்தேட்ரா”** என்பதற்கு ஆயரின் அரியணை என்பது பொருள் இதிலிருந்து தோன்றும் சொல் தான் “கத்தீட்ரல்” என்பது ஆயரின் அரியணை இருக்கும் ஆலயம் தான் “கத்தீட்ரல்” என்று அழைக்கப்படுகிறது. தூய பேதுரு தலைமை பீடம் என்பது பேதுரு திருச்சபையின் தலைவர் என்பதை குறிக்கிறது. இத்திருநாளுக்குரிய கட்டளை செபத்தின் இரண்டாம் வாசகத்தில் கூறப்படுவது போல் “இத் திருநாளைக் கொண்டாடுவதன் மூலம் குருத்துவப் பணி பெருமைப்படுத்தப் படுகின்றது”

# சர்வதேச புலம்பெயர்தல் தினத்தினை சிறப்பித்தல்



எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் 16.12.2016 அன்று சர்வதேச புலம்பெயர்தல் தினம் சிறப்பிக்கப்பட்டதுடன், புலம்பெயர்ந்து தொழில் புரிவதில் உள்ள சட்டங்கள் உரிமைகள் சமூகப் பிரச்சனைகள் தொடாபான விழிப்புணர்வு அருட்தந்தை க. நிதிதாசன் தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக கிண்ணியா பிரதேச செயலாளர் எம். ஏ. அனஸ் அவர்களும், கௌரவ விருந்தினராக கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களப் பணிப்பாளர் என். மணிவண்ணன் அவர்களும், சிறப்புவிருந்தினராக திருகோணமலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பொறுப்பதிகாரி கமால் எஸ். முகைதீன் அவர்களும், திருகோணமலை மறைக்கல்வி நடுநிலையத்தின் பணிப்பாளர் அருட்பணி என்.சி.அருள்வரதன் அவர்களும், எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் உத்தியோகஸ்தர்களும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காகச் சென்றவர்கள், செல்வதற்கு முன் ஆயத்த நிலையில் உள்ளவர்கள், வெளிநாடு சென்று நாடு திரும்பியவர்களும், அரச உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தார்கள் இந்நிகழ்வில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காகச் சென்று பாதிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பியவர்கள் தங்களின் பாதிப்பு பற்றியும் தற்போது தங்களின் நிலை பற்றிய உள்ளக் குமுறல்களையும் பகிர்ந்து கொண்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகெட் கரித்தாஸ் பணியாளர்களின் கிறிஸ்மஸ் குடும்ப ஒன்று கூடல்

எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணியாளர்களுக்கான வருடாந்த குடும்ப ஒன்றுகூடல் நிகழ்வு 20.12.2016 அன்று காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் எகெட்கரித்தாஸ் நிறுவனத்தின் தலைவரும் எமது மறைமாவட்ட ஆயருமான பேரருட்தந்தை நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களும், அருட்தந்தை போல் றொபின்சன், அருட்தந்தை அருள்வரதன், அருட்தந்தை ஜீட் யோன்சன், அருட்தந்தை ஆஞ்சலோ(யே.ச) மற்றும் அருட்தந்தை சுதர்சன் ஆகியோருடன் இணைந்து எகெட் கரித்தாஸ் பணியாளர்களின் குடும்ப அங்கத்தவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். அதுமட்டுமல்லாது மூதூர் VTC இல் 15வருடங்களாக பணிபுரிந்துவந்த திரு சாலிகு அவர்கட்கு சேவை நலன் பாராட்டி கௌரவித்தலும் பிரியாவிடை நிகழ்வும் நடைபெற்றது. அத்துடன் இருதயபுர பங்கு மக்களின் Carol நிகழ்ச்சிகளும், பற்பல விளையாட்டுக்களும் இடம் பெற்றன.

12ம் பக்கத்தில் புகைப்படம்.....

## பிரியாத உறவுகள்

Fr. N.C

- குடும்ப வாழ்வை மையப்படுத்தும்
- கவிதை வரிகளை சரிபடுத்தும் போட்டி
- எல்லோரும் பங்கு கொள்ளலாம்
- சிறிய தாளில் நிரைபடுத்தினால்
- போட்டியில் சேர்க்கப்படமாட்டாது
- எல்லோரும் சரியாக நிரைப்படுத்தினால்
- குலுக்கல் மூலம் தெரிவு இடம் பெறும்
- இரண்டுவரிகள் மட்டுமே மாறி உள்ளன.
- கண்டுபிடித்து சரியாக வடிவமையுங்கள்

**இதோ கவிதை வரிகள்**

- இதயங்கள் ஒன்றாக இணையவே
- இருவரல்ல ஒருவரெனக்காட்ட வேண்டும்
- இறைவனையே துணைபுரிய வேண்டுவோமே
- மனிதரால் பிரிபடவே கூடாது
- என்னதான் வாழ்விலே நேரிட்டாலும்
- இறைவன் இணைத்து வைத்த உறவு அதை
- நிறைந்த மகிழ்வோடு தொடர்ந்து செல்ல
- கடவுள் இணைத்து வைத்த உறவு அது.

கவிதை வரிகளை சரியாக
வடிவமையுங்கள்
1ம் இடம் : 400/=
2ம் இடம் : 300/=
3ம் இடம் : 200/=
முடிவுத்திகதி : 25.03.2017

## மறக்கத் தான் முடியுமோ?

எத்தனை ஆண்டுகள் ஆகியும் என்ன
மாயமாய் மறைந்த உறவின் நினைவுகள்
ஓயாத அலையாய் இதயத் துடிப்பினில்
மறந்து போகுமோ? மறக்கத் தான் முடியுமோ?

கடந்து செல்லும் கால வெள்ளத்துள்
மிதந்தே வருகின்ற பசுமை நினைவதை
அலைந்து திரிந்தும் மீளவும் பெற்றிட
களைத்தும் சோர்ந்திடா முகங்களைக் காண்கின்றேன்

அருகில் இருக்கும் ஆடுகள் விடுத்து
காணாத ஆட்டைத் தேடிய ஆயனே
மறுகித் தவிக்கும் மக்களின் வேதனை
உமக்கொன்றும் இஃது புதிது அல்லவே

கூக்குரலிடுகின்ற மக்களின் அழுகுரல்
உம்மை இன்னமும் எட்டவே இல்லையோ
துயரங்கள் கண்டு தாளாத தேவனே
இன்னல் களைந்திட நீர் எப்போ வருவீர்

மூன்றே நாள் காணாது உம்மைதேடியே ~ உம்
தாய் தந்தை கொண்ட வேதனை நினைத்து
பிதாமகன் தூய ஆவியே நீவிர்
பிரிந்தவர் சேர்ந்திட அருள் புரிவீரே

**டெல்மா சடகோபன்**
**பேராலயம்**



## பணி வாழ்வின் வெற்றி

**அருட்பணி N.C அருள்வரதன்**

பிறந்த மண்ணை விட்டகன்று
பிறிதொரு மண்ணிலே வந்து
நிறைந்த பணிகள் புரிந்த
இலங்கையின் திருத்தூதர் தூய
யோசேப்வாஸ் முனீந்திரரின்
பணிநிலைகள்தனை நோக்க
பதறிடுமே மனங்களெல்லாம்

உயிரினைக்கையிலே பிடித்தவராய்
இறைவனின் பணியே தனதெனக்கொண்டு
எல்லைகள் கடந்து உறுதியுடன்
இறைவனின் துணையே தனதெனக்கொண்டு
அவர் ஆற்றிய பணிகளை நினைக்கும் போது
உண்மையில் இறைவன் அவருடனே
நிறைந்தே வாழ்ந்தார் என்பதுண்மை

என்னை பின் செல்ல விரும்பியவர் தம்
நாளாந்த சிலுவைகளைச் சுமந்து கொண்டு
ஒடுங்கிய பாதை வழியே அழைக்கும்
இயேசுவின் குரலை ஏற்று வாழ்விலே
தான் கண்ட துயர்கள் வேதனைகளெல்லாம்
தூய யோசேப் வாஸ் முனிந்திரரின் பணியின்
வெற்றி நிலைகளாய் இன்றும் நினைப்போமே

இந்திய மண்ணை விட்டு இலங்கையிலே
தன் பணியைப் பலநிலையில் எடுத்துக்காட்டி
தன் உயிருக்கும் அச்சுறுத்தல் வந்த போதும்
இறைவனின் துணையை மேலெனக்கொண்டே
நிறைந்த பணிகளை ஆற்றி மறைந்த
இலங்கையின் புனிதர் யோசேப் வாஸ் முனிந்திரர்
மறையாமல் மனங்களில் நிலைத்திருப்பாரே

## நற் பெற்றோர்

நல்ல குடும்பம் போன்ற
பாடசாலை எங்குமில்லை
ஒழுக்கம் மிக்க பெற்றோர் போன்ற
ஆசான்கள் யாருமில்லை.

வாழ்விலே தியாகம் செய்பவர் தந்தை
வாழ்வையே தியாகம் செய்பவர் தாய்
வாழும் போதுகாணும் தெய்வங்கள் எம் பெற்றோரே
வாழவைத்து இன்பங்காண்போரும் அவர்களே.

**செல்வி. டெனிசன் சரணியா**
**பாரதிபுரம்**

## செபிக்கும் குடும்பம்



கூடி செபிக்கும் குடும்பமாம்
கோடி ஆசீர் பெறுமாம்
நிறைந்த அன்புக் குடும்பமாம்
இறைவன் வாழும் இல்லமாம்

கூடி நின்று குடும்பமாக
செபித்து இன்பம் காண்போமே
இயேசு, மரி, சூசைபோல
இணைந்து குடும்பமாய் வாழ்வோமே

**செல்வி. சதீஸ்வரன் ரெபேக்கா**
**அன்புவழிபுரம்**

தொடர் : 01



# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்

## ஆசிரியரை நாடும் இறைவன்

சக்தியிலும், அறிவிலும், ஞானத்திலும், இறைவன் அளவற்றவர் முடிவில்லாதவர். குழந்தைகளின் அறிவையும், ஞானத்தையும் விருத்திசெய்து அவர்களை இலகுவாக பரீட்சையில் சித்தியடையச் செய்ய இறைவனால் முடியும். ஆனால் இறைவனின் விருப்பமும் வழியும் அதுவல்ல. பிள்ளைகளின் எல்லா வளர்ச்சிப் படிநிலைகளிலும் அவர்களை அரவணைத்து அன்புசெய்து அமுதூட்டி வளர்த்தெடுக்க தாயைப் படைத்தது போல் அறிவையும் ஞானத்தையும் ஊட்டிவளர்க்க நல்லாசிரியர்களை இறைவன் தேர்ந்து கொண்டார். மனிதனை மீட்க மனிதனின் உதவியும் ஒத்துழைப்பும் இறைவனுக்கு தேவைப்படுகின்றது. ஆனால் இம்மீட்புசெயலில் இறைவனுக்கு உதவுவதற்கு குழந்தைகளுக்கு அறிவும் அனுபவமும் போதாதென்றபடியால் இம்முக்கியமான பணியில் தனக்கு உதவ இறைவன் ஆசிரியர்களை அழைத்திருக்கின்றார்.

பல ஆசிரியர்களைப் பொறுத்தவரை, சிலவருடங்களுக்கு முன்பிருந்தே, ஏனைய அரச துறைகளில் வேலைவாய்ப்பு கிடைக்காத காரணத்தினாலோ அல்லது ஆசிரிய சேவையில் காணப்படும் சலுகைகளுக்காகவோ இத்துறையைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். தற்காலத்தில் ஆசிரியரின் ஊதியமும் ஓரளவுக்கு திருப்திகரமானதாக உள்ளது என்பதையும் இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமானது. விரும்பியோ விரும்பாமலோ இந்நிலையை ஆசிரியர்களில் பலரும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். இவ்வாறான ஆசிரியர்கள் கூட இறைவனுக்கு உதவுபவர்களாக இருக்கின்றனர். ஆசியர்களுக்கு கட்டாயமாக கிடைக்க வேண்டிய பயிற்சியும் இருக்க வேண்டிய வினைத்திறனும் இவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம், இயலுமையும் புத்திசாலித்தனமும் இல்லாமல் கூட இருக்கலாம். ஆனால் தனது மனத்தையும் இதயத்தையும் திறந்து இறைவனின் உதவியை நாடினால் இறைவனின் உதவிக்கரம் நீட்டப்படும் என்பது உறுதி.

ஆசிரியர்களைப் பொறுத்தவரை இரு துருவங்கள் (Extremes) உள்ளன. நான் புத்திசாலி, பயிற்றப்பட்டவன், என்னால் எல்லாம் முடியும் என்ற மனநிலையோடும், அதீத தன்னம்பிக்கையும், தலைக்கனத்தோடும், இறைவனின் உதவி எனக்கு எதற்காக என்ற எண்ணத்தோடும் இருப்பவர்கள் ஒருவகையினர். உண்மை என்னவென்றால் ஒருவர் அறிவாளியோ இல்லையோ இறைவனின் வல்லமையிலும், உதவியிலும் நம்பிக்கை உண்டோ இல்லையோ வகுப்பறையில் ஒவ்வொரு வினாடியும் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் இறைவனின் வல்லமையை தனது கற்றல் கற்பித்தல் பணியில் உணர்ந்து கொள்வாராயின் அவரது ஆசிரியப்பணி மென்மேலும் வினைத்திறனுடையதாக அமையும். இவர்கள் முழு விருப்போடு பணிசெய்யவும், ஆர்வத்தோடு கற்றுக்கொள்ளவும் தயாராக இருக்க வேண்டுமென இறைவன் கேட்கின்றார். விவேகமும், நுண்திறனும், புத்திசாலித்தனமும் கொண்ட சிறப்புற பயிற்றப்பட்டிருக்கும் ஆசிரியர்களுக்கும் இது பொருத்தமானதாக அமையும்.

இன்னுமொரு வகையான ஆசிரியர்களையும் அவதானிக்கலாம். கற்றல் கற்பித்தல் பணியில் எம்மால் எல்லாவற்றையும் சாதிக்க முடியாது என்று நினைப்பவர்கள், கடவுளின் வல்லமையை மதிப்பவர்கள்: பாராட்டுபவர்கள், உதவியை வேண்டி நிற்பவர்கள், அதேவேளை போதிய முயற்சி எடுக்காமல், அர்ப்பணிப்பின்றி சோம்பேறித்தனத்தோடு இறைவனின் வல்லமையில் மட்டுமே நம்பிக்கை வைத்து எல்லாவற்றிற்கும் அவரையே கையேந்தி நிற்பவர்களும் உண்டு.

இந்த இரு மனப்பான்மையும் தவறானதாகும். இவ்விருவகையான ஆசான்களால் வினைத்திறனோடு பணிசெய்ய முடிவதில்லை. தனது திறமையில் நம்பிக்கையும், விடாமுயற்சியும், தியாகசிந்தையும், அதேவேளை இறைவனின் உதவிக்கரத்திலும், வல்லமையிலும் நம்பிக்கை கொண்ட ஆசான்களையே இறைவன் எதிர்பார்க்கின்றார். ஆசிரியர்களே! நீங்கள் எந்தவகையைச் சார்ந்தவர்கள்?

ஒவ்வொரு ஆசிரியரும் தனித்துவமுடையவர். ஒரே கற்பித்தல் பணியை வெவ்வேறு முறைகளில் தமக்கேயுரிய பாணியில் செய்யக்கூடியவர். ஒரு விடயத்தை இரு ஆசிரியர்கள் இரு வேறுவிதமாக கற்பிப்பார்கள். ஆகவே குறிப்பிட்ட ஒரு ஆசிரியர் தனது கற்பித்தலை சரியாகவும் நேர்த்தியாகவும் மேற்கொள்ளவில்லையெனில் அவரை இன்னுமொரு ஆசிரியரால் பதிலீடுசெய்ய முடியாது. பதிலாளும் அதேபாணியில் கற்பித்தலை மேற்கொள்ள முடியாது. எனவே குறிப்பிட்ட ஆசிரியர் மூலம் குறிப்பிட்ட வகுப்புக்கு இறைவனால் திட்டமிடப்பட்ட குறிப்பிட்ட பணி நிறைவேற்றப்படாமல் போகலாம்.

**பதிப்பாசிரியர் குறிப்பு :**

'நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும் என்ற தொடரை அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி அவர்கள் திருமலைதீபத்தில் எழுத முன்வந்துள்ளார். இவர் ஒன்பது வருடங்கள் ஆசிரியப் பணியிலும், நான்கு வருடங்கள் அதிபர் பணியிலும் தன்னை அர்ப்பணித்தவர். மெய்யியல், இறையியலில் இளங்கலைமாணிப் பட்டமும், கல்வி முதுமாணிபட்டமும் பெற்ற இவர் தொடர்ச்சியாக கல்விப்பணியில் தன்னை அர்ப்பணித்துள்ளார்.

இத்தொடர் பற்றிய உங்களது கருத்துக்களை அனுப்புவதற்கு :

**Mobile :0773864144**
**E-mail:saponcianomi@gmail.com**
**பதிப்பாசிரியர்.**

தொடரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாண்டிற்கான மறையாசிரியர் கருத்தரங்குகள்

- 25 ~ மாசி ~ சனிக்கிழமை
  தலைப்பு ~ குடும்பங்களுக்கான அருட்பணிகள்
  உரையாளர் ~ அருட்பணி எச். யூட்ஜோன்சன்

  **(ஆயர் மறையாசிரியரை சந்திப்பார்)**
- 29 ~ சித்திரை ~ சனிக்கிழமை
  தலைப்பு ~ தூய மத்தேயு நற்செய்தி
  உரையாளர் ~ அருட்பணி ஆல்வின் பெர்னாண்டோ
- 24 ~ ஆனி ~ சனிக்கிழமை
  தலைப்பு ~ தூய மத்தேயு நற்செய்தி
  உரையாளர் ~ அருட்பணி ஆல்வின் பெர்னாண்டோ

  **(ஆயர் மறையாசிரியரை சந்திப்பார்)**
- 22 ~ ஆடி ~ சனிக்கிழமை
  தலைப்பு ~ தூய மத்தேயு நற்செய்தி
  உரையாளர் ~ அருட்பணி ஆல்வின் பெர்னாண்டோ
- 30 ~ புரட்டாதி ~ சனிக்கிழமை
  தலைப்பு ~ குடும்ப ஆண்டு
  உரையாளர் ~
- 28 ~ ஐப்பசி ~ சனிக்கிழமை
  தலைப்பு ~ தூயயோசேப் வாஸ் ஆண்டு
  உரையாளர் ~

  (ஆயர் மறையாசிரியரை சந்திப்பார்)

◆ காலை 9.00 முதல் மதியம் 3.00 மணிவரை அனைத்து கருத்தரங்குகளும் நடைபெறும். மதிய உணவும் வழங்கப்படும்

## மறைக்கல்வி கற்போம் – 23

01. தூய யோசேப்வாஸ் குருத்துவப் பட்டம் பெற்று எந்த சபையில் இணைந்தார்?
    சுதேச துறவற சபையான ஒரற்றோரியன் சபை
02. தூய யோசேப்வாஸ் அடிகளை அருளாளர் என்ற நிலைக்கு உயர்த்திய திருத்தந்தை யார்? எப்போது?
    திருத்தந்தை 2ம் ஜோன்போல் , 1995 ஜனவரி 21
03. தூய யோசேப்வாஸ் பேசிய மொழி எது? அவர் எக் குலத்தைச் சேர்ந்தவர்?
    கொங்கொணி மொழி
    இவர் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்
04. தூய யோசேப் வாஸ் அடிகளாரின் சகோதரர்கள் எத்தனைபேர்?
    5 பேர்
05. மத்தேயு நற்செய்தியின் சின்னம் (அடையாளம்) என்ன?
    மனித முகம்
06. தூய யோசேப் வாஸின் தாய் மொழி எது?
    கொங்கொணி மொழி
07. இம்மானுவேல் என்பதன் பொருள் என்ன?
    'கடவுள் நம்முடன்'
08. எந்த அரசன் காலத்தில் எந்த ஊரில் இயேசு பிறந்தார்?
    ஏரோது அரசன் காலத்தில்
    யூதேயாவில் உள்ள பெத்லகேமில்
09. குழந்தை இயேசுவை பார்க்க எந்த திசையிலிருந்து ஞானிகள் வந்தார்கள்?
    கிழக்கிலிருந்து
10. குழந்தை இயேசுவை ஞானிகள் எவ்வாறு வணங்கினார்கள்?
    நெடுஞ்சாண்கிடையாக

*உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்பார்க்கின்றோம். அவற்றை திமலைத் தீபத்திற்கு அனுப்பிவைக்கவும்.*

*குறிப்பு: பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பிவையுங்கள்.*

*அனுப்ப வேண்டிய முகவரி :– ஆசிரியர்*
*திருமலைத் தீபம் 297, டொக்கியாட் வீதி,*
*திருகோணமலை.*

## குட்டிக்கதை ஒன்று

F.r. N.C

எதற்கும் ஒரு அளவுண்டு ஒருவருக்கு உடல் வியாதி வைத்தியரிடம் சென்று காட்டி, வைத்தியரும் பரிசோதித்துவிட்டு காலை, மதியம், இரவுக்கென மூன்று வேளை மருந்து கொடுக்கிறார். மூன்று வேளையும் ஒருவேளைக்கு மூன்றாக மாத்திரை எடுக்கும்படி சொல்லி அனுப்புகிறார்.

வருத்தப்பட்டவர் தான் விரைவாகக் குணமடைய வேண்டும் என்னும் எண்ணத்தோடு வைத்தியர் கூறியதற்கு மாறாக முதல் வேளையே ஆறு மாத்திரைகளைப் போட்டு விட்டார். என்ன கொடுமை வியாதி நிலை மாறிவிட்டது. வீட்டார் உடனடியாக அதே வைத்தியரிடம் கொண்டு சென்றார்கள். மாத்திரைகளைக் கூடுதலாக போட்டதை அறிந்து கொண்ட வைத்தியர் விபரீதம் ஏதும் நடக்காமல் நிலைமையைச் சரியாக்கிவிட்டார். வீட்டாருக்குப் பெரிய ஆறுதல். பார்த்திர்களா அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது உண்மைதானே.

## கனிவான செயல்களும், கல்வியும்

**"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதிலும் கூன குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது" – ஔவையார்–**

வறியவர் என்றாலும், வசதியானவர்களென்றாலும் உடலில் ஊனமின்றி, அதிலும் மானிடராக உதித்த உவகையில் குழந்தைகளை "கண்ணே மணியே" எனக் கொஞ்சுவது இயல்பல்லவா! தமக்குப் பேறாகக் கிடைத்த குழந்தைச் செல்வங்களை எதிர்காலத்தில் எல்லோர் முன்னிலையிலும் ஏற்றமுடன் வாழ பெற்றவர்கள் பெரும் பாடுபட்டு உழைக்கின்றார்கள் தானே!

மனிதனை ஆறறிவு படைத்தவனாக மிருகத்திடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது, இன்றைய கால கட்டத்திலே முக்கியத்துவம் பெற்றுள்ள கல்வி என்னும் அரிய பொக்கிஷமாகும். கல்வியினூடாக அறிவையும், அதனோடு கூட அரிய பண்புகளையும் ஊட்டக் கல்விமான்களும், பெற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்பவர்களும் கரசினையுடன் செயல்பட வேண்டும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

குழந்தையின் பிறப்பிலே மகிழ்ந்த தாய், அது வளர்ந்து பிறரால் சிறந்த அறிவாளி, அதிகாரி எனப் பாராட்டப்படும் போது இரட்டிப்பான மகிழ்ச்சியடைகின்றான் என்பதை இக்குறள் எடுத்தியம்புகின்றது. அறிவால் மட்டுமல்லாது அனைவரையும் அனுசரித்து நடக்கின்ற பண்புகள், பழக்கவழக்கங்களாலும் சான்றோராக ஒருவர் திகழும் போது தான் மானிடத்துவம் மலர்கின்றது.

"பிறப்பினால் எவருக்கும் பெருமை வராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டுமப்பா"

நல்ல செயல்கள் எங்கே உருவாகின்றது என்று பார்த்தால் ஒருவர் வளர்கின்ற, வளர்க்கின்ற சூழலிலேதான் தங்கியுள்ளது. இரண்டு கிளிகள் வளர்க்கப்படுகின்றன ஒரு கிளி முனிவரது ஆச்சிரமத்திலும் மற்றையது திருடன் ஒருவனின் வீட்டிலும் வளர்க்கப்படுகின்றது. ஆறு மாதத்தின் பின் கிளியைக் கொடுத்தவர்கள் முனிவரது இருப்பிடம் சென்றபோது "வாருங்கள் வாருங்கள் அமருங்கள் ஐயா தியானத்தில் இருக்கிறார். இதோ வந்து விடுவார்." என்று வரவழைத்தது. திருடனின் இல்லம் சென்றபோது "அண்ணா ஓடிவா நிறைய நகை போட்டு வாரான் பறி பறி விடாதே" என்று கூக்குரலிட்டது.

பிறப்பினால் எவருக்கும் பெருமை வராது. சாதி சமயம், இனம் என்பதை கடந்து வளர்கின்ற சூழலால் தான் சீரும் சிறப்பும் உயர்வும் கிடைக்கும் என்பதை இச்சம்பவம் காட்டி நிற்கின்றது.

பிள்ளைகளுக்கு பெற்றோர் கல்வியை கொடுப்பதுடன் கடமை முடிந்து விட்டதென்று நின்றுவிடாமல் வகுப்பறையில் நடக்கும் தேர்வுக்கு மட்டும் ஆயத்தப்படுத்தாமல் வாழ்க்கை எனும் தேர்வுக்கு அவர்களை தயார்படுத்தி தெளிவுடன் வாழ, வழிகாட்ட வேண்டும்.

தம்மை சுற்றியுள்ளவர்கள் நல்ல முறையில் தம்மை எடைபோட அவர்களின் கண்களுக்கு இனிய காட்சிகளாக திகழ பிள்ளைகள், உண்மை, நேர்மை, தூய்மை உடையவர்களாக இவ்வுலகிலே நடமாட வேண்டும்.

இன்றைய இளம் தலைமுறையினரைக் கண் கொண்டு நோக்கினால் நவீன தொழில் நுட்ப சாதனங்களில் மூழ்கி தம் வாழ்வை தவறான பாதையில் இட்டுச் செல்கின்றவர்களாக வேயுள்ளனர். நவீனங்களை நாகரீகமாக பயன்படுத்தினால் நன்மைகளையடைலாம். அதற்கு சிந்தனையும் (எண்ணங்கள்), செயலும் ஒன்றுபட்டால் தான் முன்னேற்றம் முயற்சியுடையவர்களை நாடி தேடி வரும்.

உயர்ந்த எண்ணங்களை உள்ளத்திலே உருவாக்கி அறிஞர்களாக அறிவாளிகளாக சிந்தனையாளர்களாக சாதனையாளர்களாக சரித்திரம் படைத்தவர்களாக உயர்ந்து உலகிலே புகழப்பட்டு மறைந்தும் மறக்கப்படாதிருப்பவர்களும் இன்று எத்தனைபேர்.

பேராற்றல்களையும் பெரு வெற்றிகளையும் பேறாக கொண்டவர்கள் அவற்றை புதைக்காது சிதைக்காது சீரழிக்காது சீரும் சிறப்புமாக்கிட விடாமுற்சியுடன் விளைநிலங்களாக்கிட வேண்டும்.

" எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லதை எண்ண வேண்டும்
தின்னிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

எண்ணங்களின் பிரதிபலிப்பே வாழ்க்கை.

"தீயதை பார்க்காதே கேட்காதே பேசாதே நற் செயல்களால் நம் வாழ்வை மெருகூட்டுவோம்" என மாணவ சமுதாயம் உறுதியான முடிவெடுத்து கல்வியை புலனடக்கத்துடனும், மனப்பாட்டுடனும், தன்னம்பிக்கையுடனும், விடா முயற்சியுடனும் வீறு நடை போட்டு எதிர்கால வாழ்வை ஏற்றமுடன் எழுச்சி பெற்று வாழ வாழ்த்துகின்றேம்.

**திருமதி ஜெயவதனி மரியதாஸ்**
**ISA (RC&NRC) திருகோணமலை**

## புதிய ஆண்டினை வரவேற்றலும் பிறந்தநாள் நிகழ்வும்.



புதிய ஆண்டிணை வரவேற்றலும், எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளரின் பிறந்தநாள் நிகழ்வும் 01.01.2017 அன்று காலை 9.00 மணிக்கு கூட்டுத் திருப்பலியுடன் ஆரம்பமானது.

இதில் அருட்தந்தையின் நல்வாழ்விற்காகவும். 2017 இல் எமது அலுவலகப் பணிமென்மேலும் சிறந்து விளங்க வேண்டுமென்று விசேட விதமாக மன்றாடியதோடு, புதுவருட கைவிசேடமும் வழங்கப்பட்டது.

## சொற்களின் சக்தி

- கவனயீனச் சொல் ~ பிரிவினையை உருவாக்கலாம்
- கொடூரச் சொல் ~ வாழ்வை அழிக்கலாம்
- கசப்புச் சொல் ~ மனப்புண்ணை உருவாக்கலாம்
- கேவலமான சொல் ~ வாழ்வைக் கொல்லலாம்
- பண்பான சொல் ~ வழியை இலகுவாக்கலாம்
- சந்தர்ப்பத்துக்குரிய சொல் ~ மன உளைச்சளை தீர்க்கலாம்
- அன்பான சொல் ~ குணப்படுத்தி ஆழி வழங்கலாம்

**ஆக்கம் : ஷதுர்சன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிக்கப்பட வேண்டிய சில வழிபாட்டுக் குறிப்புக்கள்

2016ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16ம், 17ம் திகதிகளில் நடைபெற்ற கத்தோலிக்க ஆயர் பேரவையின் அமர்வில், வழிபாடுகளை ஆயத்தம் செய்யும் பங்குகள் மற்றும் நிறுவனங்களுக்கு கீழ் வருகின்ற விடயங்களை அறிவுறுத்தும் படியாக கேட்டுக் கொள்ளப்பட்டேன்.



1. உரோமைத் திருப்பலி புத்தகத்தின் விளக்கவுரைக்கமைய, திருப்பலிக்கான முன்னுரையை ஒரு பொதுநிலை விசுவாசிஷ வழங்குவாரெனில், இது குருவானவர் பிதா சுதன்... என்று திருப்பலியை ஆரம்பிப்பதற்கு முன்னதாக சொல்லப் பட வேண்டும். 'இது குருவானவரால் வழங்கப்படுமாயின் மக்களை வாழ்த்திய பின், பாவமன்னிப்பு வழிபாட்டிற்கு முன்னதாக கூறலாம். எப்படியெனினும் முன்னுரையானது சுருக்கமாக அன்றைய வழிபாட்டை அறிமுகப்படுத்துவதாக இருக்க வேண்டும்'. (உ.தி.பு.வி. 29) இது இன்னொரு மறையுரை போல் இருத்தலாகாது. மறையுரையானது நற்செய்தி வாசகத்திற்கு பின் வழமையாக இடம்பெறும்.

2. 1ம் வாசகத்திற்கு பின் பதிலுரைப்பாடலை வாசிப்பது அல்லது பாடுவது வார்த்தை வழிபாட்டின் மிக அவசியமான ஒன்றாகும். வழக்கமாக வாசக நூலிலிருந்து சங்கீதம் எடுக்கப்பெறும். (உ.தி.பு.வி. 36)

3. விசுவாசிகளின் மன்றாட்டு சுருக்கமாக சொல்லப்படவேண்டும். இதன் பதிலுரையை விசுவாசிகள் தெளிவாக விளங்கிக் கொள்ளும் பொருட்டு வாசிக்கலாம் அல்லது பாடலாம். (உ.தி.பு.வி. 45 - 46) இது தொடக்கத்திலிருந்து சில இடங்களில் நடைபெறுவது போல இதனை கவிதை வடிவில் பாட முடியாது.

4. இருமொழி, மும்மொழி திருப்பலியின் போது, ஒரு மொழியில் கூறப்பட்ட மன்றாட்டை இன்னுமொரு மொழியில் கூற அவசியமில்லை. ஞாயிறு தினத்தில் 4 பொது மன்றாட்டுக்களும் விஷேச பெருவிழா நாட்களில் 5 பொது மன்றாட்டுக்களும் கூறலாம்.

5. கத்தோலிக்க ஆயர் பேரவையானது திருமண திருப்பலியின் போது, பறக்கும் புகைப்பட கருவிகளை (drone camera) பயன்படுத்துவதை முற்றாக தவிர்க்க ஆவண செய்கிறது. இது வழிபாட்டிற்கும், வழிபாட்டில் பங்கு கொள்வோருக்கும் இடையூறாக இருக்கின்றது. பங்குத் தந்தையர்கள் இது தொடர்பாக விசுவாசிகளுக்கு அறிவுறுத்த அழைக்கப்படுகின்றார்கள்.

6. ஞாயிறுதினம் மற்றும் திருவிழா நாட்களில் ஆலய அறிவித்தல்களானது நற்கருணை மன்றாட்டுக்குப் பின் சுருக்கமாக வாசிக்கப்பட வேண்டும். (உ.தி.பு.வி. 123) (அதாவது நற்கருணை சடங்கு நிறைவுற்ற பின்) ஏதும் அதிகமாக அறிவித்தல்கள் இருந்தால் அவற்றை துண்டுப்பிரதி அச்சிட்டு கொடுக்கலாம். அத்தோடு அவற்றை விளம்பர பலகயிலும் போட வேண்டும். (உ.தி.பு.வி. உரோமைய திருப்பலி புத்தக விளக்கவுரை)



**மேதகு ஆயர் கிளீட்டஸ் C. பெரேரா OSB**
**ஆயர் - இரத்தினபுரி மறைமாவட்டம்**
**தலைவர்**
**வழிபாடு மற்றும் கலாசாரத்தின் கத்தோலிக்க தேசிய பேரவை**

## நம் துன்ப நேரங்களில் இறைவனோடு பேச வேண்டும்

நோய் துன்பம் பயம் போன்ற வாழ்வின் போராட்டங்களில் நாம் இறைவனோடு பேசும் போது எளிதாக அவற்றைக் கடந்து செல்ல முடியும் என திருப்பீடச் செயலர் கர்தினால் பியத்ரோ பரோலின் அவர்கள் லூர்து அன்னை திருத்தலத்தில் கூறினார்.

பிரான்ஸ் நாட்டின் தூய லூர்து அன்னை திருத்தலத்தில் பெப்ரவரி 11 சனிக்கிழமையன்று 25வது உலக நோயாளர் தினத் திருப்பலியை நிறையேற்றி மறையுரையாற்றிய கர்தினால் பரோலின் அவர்கள் "இதோ நான் இருக்கிறேன்" என அன்னை மரியா கூறியதை மையப்படுத்தி தன் சிந்தனைகளை வழங்கினார்.

இந்நாளில் சிறப்பிக்கப்பட்ட உலக நோயாளர் தினத்தின் தலைப்பான வல்லவராம் கடவுள் எனக்கு அரும் பெரும் செயல்கள் செய்துள்ளார். (லூக்1:49) என்பத பற்றியும் விளக்கிய கர்தினால் பரோலின் அவர்கள் இந்த உலக நோயாளர் நாளின் 25வது ஆண்டு நிறைவை இத்திருத்தலத்தில் சிறப்பிப்பது இறைவனின் திருவருள் எனவும் தெரிவித்தார். இத் திருத்தலத்திற்குத் திருப்பயணம் மேற்கொள்ளும் கிறிஸ்தவர்களுக்கும் ஏனைய மதத்தவருக்கும் நன்றி தெரிவித்த கர்தினால் பரோலின் அவர்கள் கடவுள் நம்மிடம் மாபெரும் காரியங்களைக் கேட்கவில்லை ஆனால் அவரில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டுமெனக் கேட்டார் எனவும் கூறினார்.

தூய திருத்தந்தை 2ம் ஜோன்போல் அவர்கள் 1992ம் ஆண்டில் இந்த உலக நோயாளர் தினத்தை உருவாக்கினார் எனவும் முதல் உலக நோயாளர் தினம் 1993ம் ஆண்டு பெப்ரவரி 11 திகதி தூய லூர்து அன்னை திருத்தலத்தில் சிறப்பிக்கப்பட்டது எனவும் கூறிய கர்தினால் தூய லூர்து அன்னை விழா மற்றும் இந்த உலக நாளில் கலந்து கொண்ட எல்லாருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். நாம் இறைவனோடு உரையாடல் நடத்த வேண்டுமென அன்னை மரியா விரும்புகிறார். இது ஒவ்வொருவருடனும் உரையாடல் நடத்த உதவுகின்றது என்றும் கர்தினால் பரோலின் அவர்கள் தன் மறையுரையில் கூறினார்.

கர்தினால் பரோலின் அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சிறப்புப் பிரதிநிதியாக இந்த 25வது உலக நோயாளர் தினத்தை தூய லூர்து திருத்தலத்தில் தலைமையேற்று சிறப்பித்தார்.

# பாடசாலை உபகரணங்கள் பகிர்தளிக்கப்பட்ட நிகழ்வு





தூய மரியாள் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகளால் ஒன்று சேர்க்கப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் மற்றும் அவர்களுக்குத் தேவையான நாளாந்த பாவனைப் பொருட்களுடன் சில உணவுப் பண்டங்களும் உள்ளடக்கப்பட்ட பொதிகள் நீனாகேணி மலைமுந்தல் மலைமகள் வித்தியாலய மாணவ மாணவிகளுக்கு 06.01.2017 அன்று எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டது

# தூய யோசேப் வாஸ் ஆண்டு

இலங்கை கத்தோலிக்கரின் நிலை அறிந்து இலங்கைக்கு வந்து பணிசெய்ய தூயயோசேப் வாஸ் மிக ஆர்வமாக இருந்தார். இந்நோக்கத்திற்காக கடுமையாக செபித்தார். தம் மேலாளரிடம் அனுமதியும் கேட்டார்.

1686ல் தனது பதவியையும் துறந்து இலங்கைவர இவருக்கு உத்தரவு கிடைத்தது.

1686 - 1687 ல் கெலாடி எனும் அரசில் தங்கி சில மாதங்கள் அங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்குப் பணிசெய்தார்.

1687ல் வியாபாரி வேடத்தில் தூத்துக்குடி துறைமுகத்தை அடைந்தார்.

அதே வருடம் இவர் வியாபாரி போல யாழ்ப்பாணம் வந்தடைந்தார். இங்கு ஒல்லாந்தர் ஆட்சியில் கால்வினிய மதம் இருந்தது. கத்தோலிக்க மத செயல்பாடுகள் தடை செய்யப்பட்டிருந்தது. இங்கு இவர் பாதணிகள் இல்லாமல், சந்நியாசி போல இரகசியமாக மக்களுக்குப் பணிசெய்தார்.

1689ல் சில்லாலையில் தங்கி அங்கு வாழ்ந்த கத்தோலிக்கரின் நம்பிக்கையை உறுதிப்படுத்தினார்.

1690ல் சில்லாலையில் பாதுகாப்பற்ற நிலை இருந்ததால் அங்கிருந்து புத்தளம் சென்றார். புத்தளத்தில் பணிசிறப்பாக இருந்தது.



**திருத்தூதுப் பயணங்கள்**

1692ல் கண்டி இராச்சியத்திற்கு சென்றார். அங்கு இவர் ஓர் போர்த்துக்கேய ஒற்றர் என சந்தேகிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். அங்கிருந்து தன் செல்வாக்கைப் பயன்படுத்தி கொழும்புவரை சென்று கத்தோலிக்கரின் நிலை அறிந்தார்.

1687 - 1711 வரை இலங்கையில் முக்கிய இடங்களுக்கு பயணம் செய்து பணியாற்றினார்.

1699ல் மீண்டும் கண்டிக்கு வந்து அங்கு மக்களுக்கும் அரசருக்கும் பணி செய்தார். இங்கு பல உயர்குடி மக்களை மனமாற்றினார்.

1705ல் மேலும் பல குருக்கள் இந்தியாவிலிருந்து உதவிக்குவர தன் மறைபரப்புப் பணியை எட்டு மாவட்டங்காளப் பிரித்து செயல்படுத்தினார்.

1710ல் மட்டக்களப்பு கத்தோலிக்கரின் விசுவாசத்தைப் புதுப்பிக்க தாண்டவன் வெளிக்கு வந்தார். அங்கு கத்தோலிக்கரை இனம்கண்டு அவர்களுக்குப் பணிசெய்தார். இங்கு இவர் திருப்பலி ஒப்புக் கொடுக்கும் போது ஒல்லாந்தரால் பிடிபட்டு வம்பி மரமொன்றில் கட்டப்பட்டு அடிக்கப்பட்டார். இரண்டாம் தடவையும் மட்டக்களப்பிற்கு வந்து பணியாற்றி மீண்டும் கண்டிக்குச் சென்றார்.

1711ல் நோய்வாய்ப்பட்டு கண்டியில் இறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய யோசேப் வாஸ்

**எமது நாட்டின் திருத்தூதரான தூய யோசேப்வாஸ் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை இன்று எம் நாட்டில் கத்தோலிக்க திருச்சபை நிலைத்து நிற்கின்றது என்றால் அதற்கு காரணம் தூய யோசேப் வாஸ் ஆவார். எனவே அவர் பற்றியும் அவரது பணி பற்றியும் அறிந்துகொள்ள வேண்டியது நமது கடமையாகும். இம்மாதம் அவரது புனிதர் பட்டத்திற்காக முன்னின்று உழைத்தவர்கள், தொடர்புடைய இடங்கள், தகவல்கள் பற்றி அறிந்து கொள்வோம்.**

### கொச்சின் மறைமாவட்டம்

கேரளா மாநிலத்தின் மேற்குக் கரையோரப் பிரதேசமான கொச்சின் 04. 02. 1057 ல் கோவா மறைமாவட்டத்திலிருந்து தனி மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டது. பிற்காலத்தில் இம் மறைமாவட்டம் இலங்கையினுடைய மறைப்பணிக்குப் பொறுப்பாக இருந்தது. ஒரற்றோரியன் சபையினர் கோவா மறைமாவட்டத்தை மையமாகக் கொண்டு இயங்கினாலும், கொச்சின் மறைமாவட்டம் இலங்கைக் கத்தோலிக்க மக்களை நிர்வகித்தது. தூய யோசேப் வாசினுடைய காலத்தின் பின் அவரது புனிதர் பட்டத்திற்கான பணிகளை முதலில் கொச்சின் மறைமாவட்ட ஆயரே ஆரம்பித்தார். 03. 12. 1834 இல் இலங்கை தனி நிர்வாக மாநிலமாக உருவாக்கப்படும் வரை கொச்சின் மறைமாவட்டமே இலங்கைக் கத்தோலிக்கரை பராமரித்தது.

### 1. அருட்பணி செபஸ்ரியன் டொ றேகோ

முதன்முதலாகத் தூய யோசேப் வாசின் வரலாற்றை நூலாக எழுதியவர் இவராவார். இதுவே நம்பகத்தன்மை மிக்க வரலாற்று நூலாகக் கருதப்படுகின்றது. இவர் ஒரற்றோரியன் சபையில் சிறிது காலம் உறுப்பினராக இருந்தார். இந்நூல் போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்டது. தூய யோசேப் வாஸ் இறந்து 36 வருடங்களின் (1747) பின் இது வெளியிடப்பட்டது. இந் நூலுக்கான ஆதாரங்களையும் தகவல்களையும் தூய யோசேப் வாசுடன் பணி புரிந்த அவரது உதவியாளர் யோன் மற்றும் ஏனைய ஒரற்றோரியன் சபை குருக்கள் வழங்கியதாகக் கருதப்படுகிறது. 1687 இல் புனிதரின் இலங்கைக்கான பயணம் ஆரம்பிக்கப்பட்டது முதல் நடந்தவை இந் நூலில் விபரிக்கப்பட்டுள்ளன.

### 2. அருட்பணி கபிரியேல் பச்சேக்

அருட்பணி செபஸ்ரியன் டொ றேகோ போர்த்துக்கேய மொழியில் எழுதிய நூலை இவர் 1795 இல் தமிழில் மொழி பெயர்த்தார். இவர் ஒரற்றோரியன் சபைக் குரு ஆவார். 1776 இல் இலங்கை மறைப்பணிக்காக வந்த இவர் வேறு பல நூல்களையும் தமிழில் எழுதியுள்ளார். தூய யோசேப் வாசின் 200 வது விண்ணகப் பிறப்பு ஆண்டை முன்னிட்டு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் சிறிய மொழிநடை மாற்றங்களுடன் இந் நூலை 1910 இல் மீளப் பதிப்பித்தார்.



### 3. Msgr. லடிஸ்லொஸ் மைக்கேல் சலெஸ்கி sj

1852 இல் போலந்து நாட்டில் ( போலந்து அக்காலத்தில் ரஷ்யாவின் கீழ் இருந்தது) வில்நியுஸ் நகரில் **லடிஸ்லொஸ் சலெஸ்கி** பிறந்தார். 1882 இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டுத் தனது பணியை ஆரம்பித்தார். முதலில் ஸ்பெயின் நாட்டில் திருத்தந்தையினுடைய பணியில் ஈடுபட்டார். பல இடங்களில் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்த இவர் 05. 03. 1892 இல் இந்தியா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்குத் திருத்தந்தையின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். தன்னுடைய தங்குமிடத்தை அம்பிட்டிய, கண்டியில் அமைத்துக் கொண்டார். தூய பிரான்சிஸ் சவேரியார் பெயரில் அர்ப்பணிக்கப்பட்ட திருத்தந்தையின் பெரிய குருமடத்தை அம்பிட்டியவில் உருவாக்கினார். தன்னுடைய பணிக்கு அப்பால் ஒரு சாதாரண மறைப்பணியாளராகப் பணிபுரிந்தார். தமிழ், சிங்கள மொழிகளில் புலமை பெற்றிருந்தார். அவரது பணிக் காலத்தில் தூய யோசேப் வாசின் பணிகளைப் பற்றிக் கேள்வியுற்று, அவரது வரலாற்றை தனக்குக் கிடைத்த ஆதாரங்களை மையமாகக் கொண்டு உருவாக்கினார். சுதேச மறைப்பணியாளருக்கு நல்லுதாரணமான தூய யோசேப் வாஸ் புனிதர் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக அவரது புனிதர் பட்ட ஏற்பாடுகளை மீள ஆரம்பித்தார். அவரது முயற்சியினால் இன்று தூய யோசேப் வாஸ் நம்மிடையே புனிதராகக் காட்சியளிக்கின்றார்.



### 4. அருட்பணி ஞானப்பிரகாசர் OMI

அருட்பணி கபிரியேல் பச்சேக் எழுதிய தூய யோசேப் வாசின் வரலாறு 1910 இல் இவரால் மீளப் பதிப்பிக்கப்பட்டது. இவ்வரலாறு மன்னாரிலுள்ள பள்ளி முனையை சேர்ந்த உபாத்தியாயர் மகா ஆசான் ஏ. பிகிறாடோ என்பவரிடமிருந்து கிடைக்கப்பெற்றது. இன்னுமொரு வரலாற்றுக் கையெழுத்துப் பிரதியைப் பிரதி செய்து புனிதரின் வரலாறு அடிகளாரால் மெருகூட்டப்பட்டது.



### 5. அருட்பணி S. G. பெரேரா sj

இலங்கையின் முதலாவது இயேசு சபைக் குருவாகக் கணிக்கப்படுபவர் அருட்பணி S. G. **பெரேரா** ஆவார். களுத்துறையில் 05. 06. 1882 இல் பிறந்தார். இந்தியாவின் செண்பகனூரில் துறவறப் பயிற்சி பெற்ற இவர், 1918 இல் இந்தியாவில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1920 இல் இலங்கை திரும்பிய இவர் ஒரு வரலாற்று ஆய்வாளராகத் தன்னை உருவாக்கிக் கொண்டார். தூய யோசேப் வாஸ் தொடர்பான ஆவணங்களைப் போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகருக்குச் சென்று ஆய்வு செய்து அவரது வரலாறு முழுமை பெற உதவினார். அடிகளார் தமது நூலை 1943 இல் பதிப்பித்தார். இவரது சிறப்பான பணியைப் பாராட்டி இலங்கை அரசாங்கம் 1983 இல் அவரது நூற்றாண்டு நினைவாக முத்திரை வெளியிட்டு அவரைக் கௌரவித்தது.

### 6. அருட்பணி வீற்றோ பேர்ணியோலா sj

இத்தாலி நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட **அருட்பணி வீற்றோ பேர்ணியோலா** இலங்கை நாட்டிற்கு மறைப்பணியாளராக வந்தார். இவர் ஒரு இயேசு சபைக் குரு ஆவார். 10. 04. 1913 இல் பிறந்த இவர் 21. 11. 1943 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அருட்பணி S. G. பெரேராவின் நூலைத் திருத்தி 1953 இல் மீள வெளியிட்டார்.



2005 இல் இது மீளவும் பதிக்கப்பட்டது. புனிதரின் வாழ்வுடன் தொடர்புடைய பெரும்பாலான ஆவணங்களை மொழி பெயர்த்து The Catholic Church in Sri Lanka: The Dutch Period எனும் வரலாற்றுத் தொகுப்பு நூலில் அவற்றை வெளியிட்டார். மேலும் புனிதரின் இறப்பிலிருந்து 1995 இல் அவர் முத்திப்பேறு பெற்றவராகப் பிரகடனப்படுத்தப்படும் வரை நடந்த வரலாற்று முயற்சிகளைத் தொகுத்து ஒரு கட்டுரையாக வெளியிட்டார். புனிதரின் வரலாற்றுக் கால வரிசைப் பட்டியல் இதன் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இது புனிதரின் வரலாற்றை அறிந்து கொள்ள மிகவும் உதவுகின்றது.

### 7. அருட்பணி மார்ட்டின் கெரே OMI



1948 இல் மறைபரப்பணியாளராகப் பிரான்ஸ் நாட்டிலிருந்து எம் நாட்டிற்கு இவர் வந்தார் திருச்சபை வரலாற்றில் சிறப்புத் தேர்ச்சிப் பெற்ற இவர் இரண்டு கலாநிதிப் பட்டங்களை ஈட்டிக்கொண்டார். தூய யோசேப் வாசின் வரலாறு தொடர்பான பல ஆய்வுகளை மேற்கொண்டார். இவ் ஆய்வுகள் நேரடியாகப் புனிதரின் வரலாற்றோடு தொடர்புடையதாகப் பல சந்தர்ப்பங்களில் அமையாத போதும் அவரது வாழ்வை, மறைப்பணிப் பின்னணியை அறிந்துகொள்ள உதவியாக அமைந்தன. 2014ம் ஆண்டு அடிகளார் கொஹுவல, இலங்கையில் காலமானார். பிரான்ஸ் நாட்டின் மிக உயர்ந்த விருது வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.

### 8. ஆயர் வியானி பெர்னாண்டோ



1983 இல் கண்டி மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்ட இவர் பிற்காலத்தில் தூய யோசேப் வாஸ் செயலகத்தின் இயக்குனராகப் பொறுப்பேற்றார். தூய யோசேப் வாசின் முத்திப்பேறு பட்டம், புனிதர் பட்டம் ஆகியவற்றில் முன்னின்று உழைத்தவர். இவரது காலத்தில் தூய யோசேப் வாஸ் பெயரில் செப நூல் வெளியிடப்பட்டது.

### 9. அருட்பணி அலெக்ஸ் தசநாயக்க



1931 இல் தங்கொட்டுவ பிரதேசத்தில் பிறந்த அடிகளார் சிலாப மறைமாவட்டத்தின் குருவாவார். மறைமாவட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்த இவர், பிற்காலத்தில் அம்பிட்டிய தேசிய குருமடத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். தேசிய யோசேப்வாஸ் செயலகத்தின் செயலாளராகப் பணி புரிந்த இவர் தூய யோசேப் வாசின் முத்திப்பேறு பட்டம், புனிதர் பட்டம் ஆகியவற்றில் முன்னின்று உழைத்தவர். சிங்கள, தமிழ் மொழிகளில் திருப்பலி செபங்கள், பொதுச் செபங்கள் மற்றும் மன்றாட்டு மாலை ஆகியவற்றுடன் தூய யோசேப் வாசின் வரலாற்றை இணைத்து வெளியிட்டார்.



- ✳ அருட்பணி S. G. பெரேரா எழுதிய 'Life of Blessed Joseph Vaz' எனும் நூல் புனிதரின் வரலாற்றைத் தெளிவாகக் காட்டுகின்ற மிகச் சிறந்த வரலாற்று நூலாகக் கருதப்படுகின்றது.
- ✳ இந் நூல் 2010 ம் ஆண்டில் யாழ் மறைமாவட்டக் குருவான அருட்பணி ஞா. பிலேந்திரன் அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. (2ம் பதிப்பு 2011, 3ம் பதிப்பு 2014).
- ✳ தூய யோசேப் வாசின் பெயரில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலிச் செபங்கள், மன்றாட்டு மாலை என்பன சிங்கள மொழியில் உருவாக்கப்பட்டுக் கண்டி தேசிய குருமடத்தில் 2007 இல் அருட்பணி அலெக்ஸ் தசநாயக்காவின் முயற்சியால் தமிழில் இக்கட்டுரையின் ஆசிரியரால் மொழி பெயர்க்கப்பட்டது.

**இலங்கையின் திருத்தூதரான தூய யோசேப் வாஸ் முனிவரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!**

**அருட்பணி. எஸ். ஆர். ஜெயரெட்ணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூயமத்தேயு நற்செய்தி ஆண்டில்
# "நற்செய்தியை அறிவோம்"

கடந்த மாத வெளியீட்டில் அடிப்படையான சில கேள்விகளை எழுப்பி, இவ்வடிப்படைக் கேள்விகளுக்கு விடை தெரிந்தாலே 'நம் ஒவ்வொருவரின் நற்செய்தியைக் குறித்த அறிவும் அதிகரிக்கும் நமதாண்டவர் இயேசுவின் மீது நமக்குள்ள அன்பும். நம்பிக்கையும் ஆழமாகும்' என்று எழுதியிருந்தோம்.

உண்மைதான் ஒன்றைப்பற்றி அறியும் போது தான் அதன் மட்டில் அன்பும், ஆர்வமும் அதிகரிக்கும்.

**யார் எழுதியிருப்பார்?**

இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பின் பின்பு குறிப்பாக 70ம் ஆண்டின் காலப்பகுதிகள் யூதர்களின் வாழ்வில் மறக்க முடியாத சரித்திரமும், வரலாறுமாகும். "ரிச்சட் குக்" என்னும் வேதாகம ஆசிரியர் எழுதுகிறார்..... "வெட்டப்பட்ட உடல்களும். தேவாலயத்தில் தலைமைக்குருக்கள் பயன்படுத்திய பொருட்களும் சிதறுண்டு போய்க் கிடந்தன. இவைகள் ஜெருசலேம் மீது யூதர்கள் கட்டவிழ்த்து விட்ட காட்டு மிராண்டித்தனத்தின் அடையாளம்" என்று.

(காண்க: New Testament by Richard Cooke)

இத்தனை வலிகளையும் நோவுகளையும் சுமந்தபடி சிதறுண்டு போன பொருள் பண்டங்களையெல்லாம் இழந்து நின்ற யூதருக்கு ஆறுதலையும், நல்வழியையும், விசுவாசத்தையும் கொடுக்க விரும்புகிறார் மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர். நீண்ட காலமாகவே தூய மத்தேயு நற்செய்தி தான் முதலில் எழுதப்பட்ட நற்செய்தி என நம்பப்பட்டு வந்துள்ளது இந்த நற்செய்தியைத் தான் மாற்கு, லூக்கா நற்செய்தியின் ஆசிரியர்களும் பயன்படுத்தியிருப்பார்கள் என்றும் நம்பப்பட்டது. (இக் கருத்து இன்று பல வேத நூலாசிரியர்களின் மனதில் இருந்து மறைந்த விட்டதும் குறிப்பிடத்தக்கது.) எனவே யார் எழுதியிருப்பார்? எனும் கேள்விக்கு விடை காணுமுன்

**மத்தேயு அப்போஸ்தலருக்கும் ~ மத்தேயு நற்செய்திக்கும் தொடர்பு உண்டா? என்பதை அறிவோம்!**

தூய மத்தேய நற்செய்தி, மத்தேயு எனும் இயேசுவின் 12 அப்போஸ்தலர்களில் ஒருவரான தூய மத்தேயுவோடு தொடர்புபடுத்தப்பட்டே பேசப்பட்டுள்ளதை நாம் அறிவோம். திருச்சபையின் ஆரம்ப கட்டதடதிலிருந்தே இக்கருத்து நிலவி வந்துள்ளது.


இம் மத்தேயு 12 அப்போஸ்தலர்களில் ஒருவரும்,வரிவசூலிப்பவரான லேவி எனவும் நற்செய்தியில் இருந்து நாம் அறிய முடிகிறது. (மத். 9:9, 10:3, மாற். 2:14) நற்செய்திக்கு வெளியே மத்தேயுவைப் பற்றி அறிய எந்த தகவலும் எமக்கு இல்லை. எனவே மத்தேயு சீடனுக்கும் ~ மத்தேயு நற்செய்திக்குமிடையே ஏதோ ஓர் தொடர்பு உண்டு என்பதை அறிய முடிகிறது.

ஆராய்வோம் அறிவோம்..........

அருட்பணி பி.போல்றொபின்சன்

தொடரும்...........

# திருமண தகவல் நிலையம்



அன்பின் திருமலைத் தீபத்திரிகை வாசகர்களே, கத்தோலிக்க, கிறிஸ்தவர்களிடையே திருமணங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் அனைத்து பங்குகளிலும், திருமணவாழ்வை எதிர்நோக்கியிருக்கும் ஆண், பெண் இரு பாலாருடைய விபரங்களையும் கோவைப்படுத்தி, மணமகனை அல்லது மணமகளை தேடுபவர்களுக்கு உதவியாக, பங்குத் தளங்களில் தகவல்கள் கிடைக்கக்கூடியதாக ஒருதிட்டத்தை மறைமாவட்ட குடும்ப வாழ்வுபணிகள் முன்னெடுக்கவுள்ளது.

இதன் முதற் கட்டமாகப் பங்குகளில் தகவல்கள் சேகரிக்கப்படும். அதற்குரிய படிவம் பங்குத் தந்தையிரிடம் பெற்றுக்கொள்ளலாம். தகவல்கள் கிடைக்கும் காலப்பகுதியின் அடிப்படையில் சொந்த பங்கில் அல்லது ஏனைய பங்கில் உள்ள தகவல்களை கேட்டு அறியக் கூடியதாக இருக்கும். தேவை ஏற்படின் ஏனைய மறைமாவட்டங்களுக்கும் தகவல்கள் பரிமாரப்பட்டு இதன் தேவைக்கு ஏற்ப சேவைகள் விஸ்தரிக்கப்படும்.


***தகவல்:***
***அருட்தந்தை ஜூட் ஜோன்சன்,***
***குடும்பவாழ்வுப் பணிகள்,***
***தூயமரியாள் பேராலயம்,***
***திருகோணமலை.***

***Mobile: 077 2852 820***
***Land: 026 2222 323***
***Email: judejohnson12@gmail.com***


## திருவிவிலியத்தில் குறிப்பிடப்படும் குடும்பங்களுக்கான ஆசீர்வாத வாக்குறுதிகள் சில:

"உம் ஊழியனின் குடும்பம் என்றும் உம் திருமுன் இருக்குமாறுநீர் அருள்கூர்ந்து ஆசிவழங்குவீர்." 2 சாமுவேல் 7:29

"உன் வழிமரபை விண்மீன்கள் போல் பெருகச்செய்வேன்" தொ.நூ 26:4

"நான் உன்னைப் பல்கிப் பெருகச் செய்வேன், உன்னை திரளான மக்கள் கூட்டமாக ஆக்குவேன்." தொ.நூ 48:4

"ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கைகொள்ளும், அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள். தி.பா 16:31

### *குடும்ப வாழ்வு??????*

| | |
|---|---|
| இது ஒரு அழைப்பு | ஏற்றுக்கொள் |
| இது ஒரு ஆசீர் | பெற்றுக்கொள் |
| இது ஒரு அனுபவம் | கற்றுக்கொள் |
| இது ஒரு அன்புப் பிணைப்பு | இதை பற்றிக்கொள் |
| இது ஒரு இன்பம் | அனுபவித்திடு |
| இது ஒரு ஈகை | கொடுத்திடு |
| இது ஒரு பயணம் | இறுதிவரை நிலைத்திடு |

### *குடும்ப வாழ்வின் சிறப்பு:*

குடும்ப வாழ்வை ஆரம்பிப்பவர் இறைவன்
குடும்ப வாழ்வை அர்ச்சிப்பவர் இறைவன்
குடும்ப வாழ்வை ஆசீர்வதிப்பவர் இறைவன்
குடும்ப வாழ்வை சிறப்பிப்பவர் இறைவன்
குடும்ப வாழ்வை மகிமைப்படுத்துபவர் இறைவன்



## தம்பதியரே நீங்கள் ஒருவருக்காக ஒருவர்

- ஜெபம் செய்யுங்கள்
- நேசியுங்கள்
- நன்றி சொல்லுங்கள்
- மன்னியுங்கள்
- புரிந்து கொள்ளுங்கள்
- தட்டிக்கொடுங்கள்



திருமதி. சிந்துஜா லெப்பன்
குடும்ப வாழ்வுப் பணியகம்.



# தூய மத்தேயு ஆண்டு



மத்தேயு நற்செய்தி லேவியரான மத்தேயுவினால் (48 ~ 50 கி.பி) எழுதப்பட்டது. மத்தேயு இயேசுவின் போதனைகளை எபிரேய மொழியில் எழுதினார் என கிபி 14ல் பப்பியாஸ் எனும் கிறிஸ்தவ ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இதில் சரித்திர விளக்கம், பரம்பரை, உவமைகள், புதுமைகள். போதனைகள், இறைவாக்குகள் அடங்கியுள்ளன.

இதில் மூலச் சொல்லாக 'இறையாட்சி' 28 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.




இயேசுவின் அனைத்து சீடர்கள் பட்டியலில் மத்தேயுவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மாற்குவும் லூக்காவும் அவரை லேவி என குறிப்பிடுகின்றனர். வரி தண்டுபவராக இவருக்குக் கிடைத்த அழைப்பு ஏனைய சீடர்களிடமிருந்து மத்தேயுவைப் பிரித்துக் காட்டுகின்றது.

யாருக்கு எழுதப்பட்டது? யூதருக்காக. இவரே ஏனைய நற்செய்தியாளர்களைவிட பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள் இயேசுவில் நிறைவேறுவதாக 62 தடவைகள் குறிப்பிடுகின்றார். ஏனைய நற்செய்திகளைப் போல யூத கலாச்சாரங்களை மத்தேயு விளக்குவதில்லை.

முக்கிய மனிதர்கள் : மெசியாவாகிய இயேசு. அவரது பெற்றோர் சூசை, மரியா, 12 திருத்தூதர்கள், திருமுழுக்கு யோவான், பிலாத்து, சமயத்தலைவர்கள்.

அதிகாரம் 26 ~ 28 : இயேசுவின் மரணமும் உயிர்ப்பும். இவை இயேசுவின் நற்செய்தியையும் அவர் உலகின் பாவங்களை தன்னுள் சுமந்ததையும் காட்டுகின்றன. இதுவே மீட்பு பற்றிய மையப் பொருள். அவரது பாடுகள், மரணம். உயிர்ப்பு மூலமாகவே மீட்பு உண்டு. பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள், விசேடமாக 30 வெள்ளிக் காசுக்கு விற்கப்பட்டது, இரு கள்வரோடு சிலுவையில் அறையப்பட்டது போன்றன இந்த அதிகாரங்களில் நிறைவேற்றப்படுகின்றன.

அதிகாரம் 1 ~ 4 : இயேசுவின் புதுமையான பிறப்பு, அவரது குழந்தைப் பருவம் இயேசுவின் மூதாதையர் பட்டியல்.

நோக்கம்: இயேசுவே யூதர் எதிர்பார்த்த மெசியா, யூதரின் அரசர், தாவீது வழியில் பிறந்தவர்.

அதிகாரம் 5 ~ 25 : இயேசுவின் பணிவாழ்வின் தொடக்கம் முதல் அவரது மரணம் வரை. இயேசுவின் மலைப்பொழிவு. புதுமைகள். போதனைகள். இயேசுவை ஆழமாக அறியவும் இறைவன் மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்ததை உணரவும் இவை அவசியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ யூதரின் அரசனோ!

பாலஸ்தீன தேசம் உரோமைப்
பேரரசின் ஆட்சிக்குட்பட்ட
காலம் அது (கி.பி.27.30)
எருசலேம் அந்த தேசத்தின்
எழில் மிகு நகரமாய் விளங்க
மாமன்னனாம் தாவீது அவன்
மைந்தன் சாலமோன் ஞானியும்
மணிமுடி சூடி ஆட்சி புரிய
மாபெரும் நகரமாய்

பாஸ்காவென்னும் புளிப்பற்ற
பாரம்பரிய அப்ப விழாவுக்கு
பகட்டாக அலங்கரித்துக் கொள்ள
பச்சோந்திகளாயின மக்கள் வெள்ளம்
அற்புதமான விழாவைக் காண
அலையென எழும்பும் கும்பல்
விழாவிலும் வேடிக்கைச் சமரிலும்
விவேகமாய் மக்கள் திகைத்துக்கொள்ள

எருசலேமில் கைப்பாசின் மாளிகையில்
எல்லாத் தலைமைக்குரு மூப்பர் மறைநூல்
அறிஞர்களும் ஆலோசனையில்
சூழ்ந்திருக்க அவர்கள் முக பாவனை
தீப்பற்றி எரிவது போல வெறுப்பும்
தீத்துக் கட்டும் வெறித்தனமும்
கோரத் தாண்டவம் புரியும்
கோபக் கனலுமாய் முக பாவனை

மன உணர்வைப்போல
மக்களிடம் உரையாடி
விஷமதைக் கொப்பளிக்க
விஸ்வரூபமாய் வேர் கொள்ள
ஏழைத்தச்சன் சூசை மகனாம்
ஏழைகளின் இறைமகனாக
எள்ளி நகையாடுகிறான்
எங்களது சாம்ராச்சியத்தில்
சொல்வது அப்பட்டமான
தேவதூஷனமே!
சொல்ல வைப்பது யூதரின் அரசனே!
அதுமட்டுமல்ல இறந்தும் மூன்று
நாளிகையில்
அந்த உடலோடு உயிர்த்தெழுவேன் என
பிரசங்கமாய் பிதட்டுகிறான்
பித்தமில்லாத முழு மடையர்கள் மக்கள்
நாசரேத்தூரான் நினைக்கிறான்
நமது உரோமைப் பேரரசிக்கு

புரட்சிகளை ஊக்குவிக்க
புளிப்பற்ற பாஸ்காவிழாவின் போதே!
இயேசு என்னும் மகா பொய்யனை
இதய எதிரொலி எழுகிறது சிரிப்பொலியாய்
எதிரியை தீர்த்து கட்டி விட
எருசலேம் நகரின்இந்தச் சூதர்கள்

சூழ்ச்சி வலைகளை மூப்பர்கள்
சூழ்ச்சிதமாய் பின்னிக் கொண்டிருந்தனர்.
நீ யூதரின் அரசனோ!என வினவ
நீராகத்தான் சொல்கிறீரா என்றார்
நீங்கள் யாரை விடுவிக்க விரும்புவது
நீர் குற்றவாளியாக விரும்பும் பரபாசை
நீதி இருக்கை மீது வீற்றிருந்த பிலாத்துவை
நீர் அந்நீதிமானில் தலையிடாதே!
நீதிமானின் பொருட்டு கனவால் மிகவும்
நிந்திக்கப்பட்டேன் என உரைத்தான்

தலைமைக்குருக்களும் மூப்பரும்
தம் விருப்பு நிறைவேறவும் பரபாசை விடுவிக்கவும்
தம்மக்களை ஏவிவிட்டனர் ஆளுனரிடம்
தாம் இயேசுவைத் தொலைக்கவும் கேட்டனர்
தன்னால் எதுவுமாகவில்லைஎன உணர்ந்து
தண்ணீரில் கை கழுவி உரைத்தான்
உங்கள் மேலும் உங்கள்
புத்திரசந்தானிலும் இவன்
உதிரத்தின் மட்டில் இருக்கட்டுமென்றான்
ஆளுநனுடைய படைவீரர் இயேசுவை
அரண்மனைக்கு நடத்திச் சென்று
ஆடைகளைக் களைந்து செந்நிறப் போர்வை
அவருக்குப் போர்த்தி முள்முடியை
அவர் தலையில் முடியாகச் சூடி
அவன் முன் முழந்தாழிட்டு யூதரின்
அரசே வாழி என்று எள்ளிநகையாடினர்
அவர் மீது துப்பி பிரம்பால் அடித்தனர்

துகிலுடுத்தி சிலுவையில அறையச் சென்றனர்
துணைக்கு சீரேனே! ஊரான சீமோனை
தூக்கியுதவப் பணித்தனர் படைவீரர்
துடிக்கப் பதைக்க சிலுவையில் அறைந்தனர்
குற்றமற்ற மனிதனுக்கு குத்தி வைத்தனர்
குற்றறிக்கை இவன் யூதரின் அரசன்இயேசு
குற்றவாளி இருவரை வலமும் இடமுமாக அறைய
குரல் எழுப்பி இயேசு ஆவி துறந்தார்

குருடனும் உமது திருஉடலை ஈட்டியால்
குத்த கடைசித்துளி இரத்தமும் நீரும் வெளிவர
குருடனும் காண்பானே இயற்கைக் காட்சியை
குருட்டு வீரனும் குணமானதால் குதுகளிப்பானே!
துண்டுச் சீட்டுப் போட்டுக் கொண்டனர்
துகிலைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர்
தூக்கிச் செல்லாவண்ணம் போர்வீரரும்
தூங்காது காவலும் காத்தனர்

ஆக்கியோன்:
**அ. குமார் கொரேய்ரா**
கொட்டியாரத்தான்

## அறியாதவரை

இச்சைவெளிக்குள்
உலகைத் தொலைத்து நிற்கும்
வெற்றுப் பிண்டம்".. நானிறந்தால்
எனக்காக அழாதீர்!
சிந்தாத கண்ணீரை
அஞ்சலியில் சிந்திச் சிரிப்பூட்டாதீர்!
இந்திரன் சந்திரனென்றும்
ஓரிமயம் சரிந்ததென்றும்
அண்டப் புழுகுகளால்
அம்பெய்து கொல்லாதீர்!
கவனம்
அளவற்ற உங்கள்
கோமாளித்தனங்களால்
நான் மீண்டெழவும் கூடும் ~ பாடையிலிருந்து!
ஆனாலொன்று–
உங்கள் அனைவருக்கும் தெரிந்த
'நான்' என்கிற புத்தகத்தின்
புரட்டப்படாத பக்கங்களை,
எனது'இன்னொருவனை' உங்களுக்கு
அறிமுகம் செய்யாமலே மூடிவிடுகிறேன்
உங்கள் நலனுக்காக!
ஆனதினால் ~
ஒன்றைமட்டும் பரமரகசியமாய்
மனதுள் போட்டு புதைத்துவிடுங்கள்,
நம் ஒவ்வொருவருக்குள்ளும் நடமாடுமந்த
'இன்னொருவன்' அறியப்படாதவரை
நாமனைவரும் பாக்கியவான்களே!
பரிசுத்தவான்களே!

**மூதூர் ~ ஜெயராஜ்**

# குடும்ப நற்பணிகள் ஆண்டு



**ஆதாம் ~ ஏவாள் குடும்பம்**

முதல் பெற்றோர் கடவுளின் ஆசீரைப் பெற்றாலும் அலகையால் வஞ்சிக்கப்பட்டு பாவம் செய்தனர். இறைவனின் சினத்திற்கு ஆளாகி தண்டிக்கப்பட்டனர். இவர்களது இரண்டு பிள்ளைகள் காயீன் ~ ஆபேல். இருவரும் கடவுளுக்குப் பலி செலுத்தினர். ஆபேலின் காணிக்கையை கடவுள் ஏற்றுக் கொண்டபோது காயின் ஆபேல் மீது வர்மம் கொண்டு அவனை சூழ்ச்சி செய்து கொன்றான்.

**யாக்கோபு குடும்பம்**

யாக்கோபுவிற்குப் 12 பிள்ளைகள். இவர்களில் அவர் யோசேப்பை அதிகம் அன்பு செய்தார். இதனால் எரிச்சல் கொண்ட யோசேப்பின் சகோதரர்கள் அவரை அழிக்கத் திட்டமிட்டு செயல் பட்டாலும் யோசேப்பு எகிப்தில் நல்ல நிலைக்கு வந்ததும் தன் சகோதரர்களைப் பழிவாங்க வேண்டும் என விரும்பவில்லை. தந்தையோடும் சகோதரர்களோடும் மகிழ்ச்சியாக வாழவேண்டுமென்றே விரும்பி செயல்பட்டார்.

**நோவா குடும்பம்**

நோவாவும் குடும்பமும் கடவுளுக்கு விசுவாசமாக இருந்தனர். கடவுளும் பாவத்தில் மூழ்கியிருந்த உலகை வெள்ளப் பெருக்கினால் தண்டித்த போது நோவா குடும்பத்தை மட்டும் காப்பாற்றினார்.

**ஆபிரகாம் குடும்பம்**

விசுவாசத்தின் தந்தையென ஆபிரகாம் வர்ணிக்கப்படுகிறார். ஆபிரகாம் ~ சாரான் மூலமாக இறைவன் யூத இனத்தையே உருவாக்கினார். ஆபிரகாமின் நம்பிக்கை, பணிவு, செபிக்கும் முறை இன்றும் எமக்கு சிறந்த உதாரணம்.



விவிலியத்தில் குடும்பங்கள்

**சுவைக்கீன் குடும்பம்:**

சுவைக்கீன் அன்னம்மாள் மரியாவின் பெற்றோர். சாதாரண யூதப் பெற்றோராக இவர்கள் இருந்தாலும் தமது யூதக் கடமைகளை முறையாக நிறைவேற்றி கடவுள் முன் பக்தியும் தெய்வ பயமும் கொண்டவர்களாக வாழ்ந்தனர். இறைவனின் மீட்புத் திட்டத்தை இவர்கள் அறிந்திராவிட்டாலும் தம் மகள் மரியாவை இறைவனுக்கும் சமூகத்திற்கும் உகந்த பிள்ளையாக வளர்த்தெடுத்தனர்.

**லோத் குடும்பம்**

கடவுள் கோதோம் கொமோரா நகர்களை அழிக்கத் திட்டமிட்டுள்ளார் என அறிந்தபோது ஆபிரகாம் லோத் குடும்பத்திற்காக பரிந்துபேசினார்.
50 நீதிமான்கள் எனத் தொடங்கி அங்குள்ள நீதிமான்களை அழிக்கமாட்டேன் எனும் வாக்குறுதியையும் பெற்றுக்கொண்டார்.
இவ்வாறு லோத்தின் குடும்பம் தெய்வ பயம் கொண்ட குடும்பமாக வாழ்ந்துள்ளது.





**யோசேப்பு குடும்பம்:**

மரியாவிற்கும் யோசேப்புவிற்கும் கொடுக்கப்பட்ட பணி ஒன்றாக இருந்தாலும் இவர்களுக்கு வந்த அழைப்பு வித்தியாசமானது. தமது அழைப்பை இவர்கள் தொடக்கத்தில் புரிந்து கொள்ளாவிட்டாலும் இறைவனிடமிருந்து வரும் சிறப்பான அழைப்பு என தெரிந்ததும் இவர்கள் தம்மை முழுமையாக அர்ப்பணித்தனர்.

இயேசுவின் பிறப்பு, இடையர், ஞானிகள் வருகை, எகிப்திற்கு பாதுகாப்பு தேடி சென்றது. ஆலயத்தில் இயேசுவை கண்டுபிடித்தது போன்றவை பல குழப்பத்தையும் சவாலையும் தந்திருந்தாலும் இவர்கள் இறுதிவரை இறைவிருப்பத்தை நிறைவேற்றுவதில் உறுதியாக இருந்தனர்.

**ஈசாக்கு குடும்பம்**

ஈசாக்குவின் இரண்டாவது மகன் யாக்கோபு தந்தையின் ஆசீரைப் பெற வேண்டுமெனதாய் ரெபேக்கா சூழ்ச்சியால் செயல்பட்டார். கோபம் கொண்ட யாக்கோபுவின் அண்ணன் ஏசா யாக்கோபுவைக் கொல்லத் தேட யாக்கோபு தப்புகிறார். ஆனாலும் தன் மாமன் லாபானின் வீட்டில் தஞ்சம் புகுந்த யாக்கோபு பல வருடங்களின் பின்பு ஏசாவிடம் சென்றாலும் பழையதை மறந்து சமாதானத்துடன் வாழவே யாக்கோபு விரும்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூய ஜோசேப் வாஸ் அடிகளாரின் ஒரு சில வாழ்க்கைக் குறிப்புகள்

சென்ற இதழின் தொடர்ச்சி....

### 12. உல்டான் இரக்கத்தின் நம் மாதா ஆலயம்

கன்னராவிலுள்ள இவ்வாலயம் யோசேப் வாஸ் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட பங்கு ஆலயமாகும். இவ்வாலயம் இரக்கத்தின் நம் மாதாவிற்கு அர்ப்பணிக்க-ப்பட்டுள்ளது.

### 13. புனித மிக்கேல் ஆலயம் ஹங்கோலே

போர்த்துக்கேயர் காலத்தில் பிரான்சிஸ்கன் சபை குருக்களால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயத்திலும், பங்கிலும் யோசேப்வாஸ் அடிகளார் பணியாற்றினார்.

### 14. விடுதலை அன்னை ஆலயம் மங்களூர்

அக்காலத்தில் கனராவின் பிரதான ஆலயமாக இவ்வாலயம் புனித பூமியாக பிர-கடனப்பட்டிருந்தது. அப்போது கனராவில் பேராயராக இருந்த அதி.வண தோமஸ் டி கஸ்றோ அவர்களின் உத்தியோக பூர்வ ஆலயமாகவும் வாசஸ்தலமாகவும் இது காணப்பட்டது. பேராயரின் மறைவின்பின் அவரது உடல் இவ்வாலயத்திலே அடக்கம் செய்யப்பட்டது.

### 15. செபமாலை நம்மாதா ஆலயம் பார்சலோர்

ஜோசேப்வாஸ் அடிகளார் கனராவில் சேவைாற்றிய போது அவராலேயே இவ்வாலயம் கட்டப்பட்டதாகக் கருதப்படகின்றது. இவ்வாலயம் இன்று மங்களூர் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் காணப்படுகின்றது.


### 16. முடிப்பு

யோசேப் வாஸ் அடிகளார் கனராவில் சேவையாற்றிய போது சில போக்கிரிகள் அவரை கொலை செய்ய முற்பட்ட வேளையில் அவர் முழந்தாள்படியிட்டு செபிக்க ஆரம்பித்தார். அவர் முழந்தாள்படியிட்ட அவ்விடத்தில் ஊற்றுக்கள் ஊற்றெடுக்கத் தொடங்கின அவ்வேளையில் எதிரிகள் பின்வாங்கிச்சென்றனர். இன்றும் அவ் ஊற்றுக்களை காண முடிவதோடு இன்று இவ்விடம் யோசேப்வாஸ் அடிகளாருக்கு உரிய பிரபல வணக்கஸ்தலமாக விளங்குகின்றது.

### 17. கோவை ஒறத்தோரியன் சபை

கனராவிலிருந்து கோவா நகருக்கு மீண்டும் வந்த யோசேப்வாஸ் அடிகளார் பேராயரின் கீழ் இயங்கிய சுதேச குருக்கள் சபை ஒன்றில் இணைந்து சேவை ஆற்றினார். கி.பி.1685 செப்டம்பர் மாதம் 25ஆம் திகதி இச்சபையை ஒறத்தோரியன் சபையாக மாற்றி அமைத்தார். இதுவே ஆசியாவில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட சுதேசக் குருக்கள் சபையாக காணப்படுகின்றது இலங்கையில் மறைபரப்பு பணியை மேற்கொள்வதே இச்சபையின் முக்கிய நோக்கமாக இருந்தது. கி.பி 1687ஆம் ஆண்டிலிருந்து 150 வருடங்களாக இலங்கையில் மறை பணியாற்ற இச்சபையில-ருந்தே குருக்கள் வருகை தந்திருந்தனர்.

# மத்தேயு நற்செய்தி: ஓர் அறிமுகம்



### யாருக்கு எழுதுகிறார்?

மத்தேயு நற்செய்தி யூத கிரேக்க கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. எனலாம் எனினும் யூத கிறிஸ்தவர்கள் எளிதாக புரியும் வகையில் இது எழுதப்பட்டதாகத் தெரிகிறது. சான்றாக கடவுளரசு எனாமல் விண்ணரசு என்று யூத பாணியில் இந் நற்செய்தி கூறுகிறது (33 முறை). சில வார்த்தைகள் சதையும் ரத்தமும் (16:17) கட்டவும் அவிழ்க்கவும் (19:9) ராக்கா (5:22) கோர்பான் (15:22) யூதர்களுக்கு எளிதில் புரியும் யூத பழக்கங்களை விளக்காமல் விட்டு விடுகிறார். யூத பக்தி முயற்சிகளான செபம், தபம், தர்மம் (6:1-18) இவைகளை வலியுறுத்துகிறார். இன்னும் 7 உவமைகள், 7 ஆவிகள், 7 ரொட்டித் துண்டுகள் எல்லாம் யூத எண்களைக் குறிக்கிறது.

### நோக்கம்

மத்தேயு நற்செய்தி இயேசுவைப் பற்றியும் கிறிஸ்தவர்களைப் பற்றியும் உள்ள பாரம்பரியத்தை படைப்பாற்றலோடும் புதிய விளக்கங்களோடும் தருகிறது. இவ்வாறு கற்பிக்கவும், அறிவுறை தரவும், வழிபாட்டில் பயன்படுத்தவும், மறையுரைக்கு துணை செய்யவும், வேத போதகத்திற்கு உறுதுணையாய் அமையவும், விவாதங்கள் எழுகையில் தகுந்த பதிலளிக்கவும், தற்காப்புக்காகவும், அறிவுரை தரவும், வழிபாட்டில் பயன்படுத்தவும், மறையுரைக்கு துணை செய்யவும், வேத போதகத்திற்கு உறுதுணையாய் அமையவும், விவாதங்கள் எழுகையில் தகுந்த பதிலளிக்கவும், தற்காப்புக்காகவும் எழுதப்பட்டதாக தெரிகிறது.

போதனைகளையும் நிகழ்ச்சிகளையும் பயன்படுத்தி தனது குறிக்கோளை நிறைவு செய்கின்றார். அறிஞர்கள் திருச்சபையின் மூப்பர்களுக்கு மறைபோதகக் கையேடு ஒன்றை வடித்து தந்திருக்கின்றார். என்பாரும் உண்டு. நற்செய்தியில் இயேசுவின் போதனையை படிக்கின்ற போது அவரோடு உரையாடுவது போன்ற ஒரு உணர்வு ஏற்படுகின்றது.

### அமைப்பும், சிறப்பும்

மத்தேயு நற்செய்தியாளர் ஒரு கைதேர்ந்த இலக்கியப்படைப்பாளர். இவர் பல இலக்கிய கூறுகளையும் பல்வேறு இலக்கணச் சிறப்புகளையும் பயன்படுத்தி ஒர் அற்புத படைப்பை நமக்கு தந்துள்ளார்.

முன் தொடரணி (Chiasm) இருபுடை இசைபு அமைப்பு (Symmetrical) உள்படுத்தும் நுணுக்கம் (Inclusion) போன்றவைகளை பயன்படுத்தி மிகச் சிறப்பாக நற்செய்தியை அமைக்கின்றார். விண்ணரசு பற்றிய 7 உவமைகளை மையமாக வைத்து (அதி 13) மற்ற நிகழ்வுகளையும் போதனைகளையும் மாற்றி மாற்றி அமைப்பது இவரை கைதேர்ந்த ஓர் இலக்கியவாதியாகக் காட்டுகின்றது. மோசே பழைய ஏற்பாட்டின் 5 நூல்களை நிகழ்ச்சியுரைகள், போதனைகளால் பின்னி தருவது போல மத்தேயுவும் 5 நிகழ்ச்சியுரைகள் போதனைகளால் கோர்த்துத் தருகிறார் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் இக் கூற்று இன்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை ஏனெனில் பாடுகள், மரணம், உயிர்ப்பு போன்றவை இவ்வமைப்பில் புறம்பே போய்விடும் மேலும் யோவான் உரையை (3:1-2) உயிர்த்த இயேசுவின் உரையோடு (28:18-20) ஒப்பிடுவர்.

தொடரும்..........

# விவிலியத்தில் குடும்பம்



சென்ற இதழின் தொடர்ச்சி....


### நிறைவுரை

யோசேப்பும் மரியாளும் இறைவன் நல்லருளால் தோன்றிய இயேசுவும் சேர்ந்து திருக்குடும்பமாகப் போற்றப்படுகின்றனர். நாசரேத்தூர் இளைஞராகிய இயேசு தம் பெற்றோருக்குக் கீழ்படிந்து தச்சுத் தொழிலாளியாக விளங்கினார். திருக் குடும்பத்தா-ரின் அன்பும் பண்பும் பரிவும் பாசமும் நம் அனைவருடைய குடும்பங்களிலும் திகழ வேண்டும்.

இயேசு வழங்கிய புதிய கட்டளையினை நாம் அனைவரும் ஏற்றுப் போற்றுவது இன்றியமையாதத் தேவையாகும் 'ஒருவருக்கு ஒருவர் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்கு கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவருக்கு ஒருவர் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வர்' (யோவா 13:35) இறையன்பும் பிறரன்பும் மோசே வாயிலாக வையகத்தாருக்கு வழங்கப் பெற்ற பத்துக் கட்டளைகளின் பிரிவு என்றார் இயேசு பெருமான். உலகில் அன்பும் அறமும் தழைத்தோங்க விழைவோரே, புதியதோர் உலகம் செய்பவராவார். 'இதயமெல்லாம் அன்பு நதியினில் நனைப்போம். இது எனதே என்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்' என்ற பாகவேந்தர் பாடுவது போன்று அனைவரும் ஒருங்கிணைந்து உழைத்திடத் தக்கவாறு குடும்பமாகிய குட்டித் திருச்சபையினை வலிவாகவும் பொலிவாகவும் பேணிக்காப்போம். விவிலியத் திருநூல் காட்டும் வழியில் வாழ்ந்து காட்டுவோம்.

நன்றி: விவிலிய விருந்து

# பாதுகாப்பான போக்குவரத்தும், விதிமுறைகளுக்கான பயிற்சி பாசறை



யூனிசெப் அனுசரணையுடன் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் பாதுகாப்பான போக்குவரத்தும், விதிமுறைகளும் எனும் தொனிப்பொருளில் பயிற்சிப் பாசறையானது 06.12.2016 அன்று தீபம் நிலையத்தில் நடைபெற்றது.

இதில் INJURY Prevention பிரிவில் பணியாற்றும் ஊழியர்கள் சகல மாவட்டங்களிலும் இருந்து வருகை தந்திருந்தனர். இவ் இரண்டு நாள் செயலமர்வானது ஓய்வுபெற்ற DIG பேரின்பநாயகம் (மோட்டார் போக்குவரத்துப் பிரிவு) அவர்களினால் முன்னெடுக்கப்பட்டது. இப் பயிற்சிபாசறையின் இறுதியில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுவோடு 12 மணி நேர விசேட நற்கருணை ஆராதனை

இயேசுவோடு 12 மணி நேர விசேட நற்கருணை ஆராதனை 11. 02. 2017 அன்று செல்வநாயகபுர தூய வனத்து அந்தோனியார் ஆலயத்தில் பகல் 12 மணிக்கு பங்குக் குரு அருட்பணி ஜெயரெட்ணம் அவர்களால் திவ்ய நற்கருணை எழுந்தேற்றம் செய்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் எமது மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு கிறிஸ்றியன் நோயல் இம்மானுவேல், மறைமாவட்ட குருமுதல்வர் ரீ. கிங்ஸ்லி றொபட்,மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளர் அருட்தந்தை அன்று ஸ்ரீபன் மற்றும் அருட்தந்தையர்களான பிலிப், என். சி. அருள்வரதன், யூட்ஜோன்சன், போல் றொபின்சன், றொகான் பேனாட், ஜோன்பிள்ளை, யோகராசா அமதி, ஜொனத்தன், ஜெயபாலன் அமதி, டன்ஸ்டன், நிதிதாசன், றொயிசன், யேசு ரமேஸ், யூட் சர்வானந்தன், அலெக்ஸ் செல்லையா, மற்றும் அருட்சகோதரர் றூவ் ஆகியோர் கல்நது கொண்டனர்.

மேலும் திருச்சிலுவை கன்னியர் சபை அருட்சகோதரிகள், அன்னைதெரேசா, அன்புக் கன்னியர் அருட்சகோதரிகள், அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அருட்சகோதரிகள், மற்றும் தூய சம்மனசுகளின் சபை அருட்சகோதரிகள், பங்கு பற்றியிருந்தனர். அனைத்து பங்குத் தளங்களிலிருந்து பொது நிலையினர்வருகை தந்து நற்கருணை நாதருடன் மொனத்தில் செபித்திருந்தனர்.

அத்துடன் இயேசுவோடு 12 மணி நேர நற்கருணை ஆராதனையின் சிறப்பம்சமாக ஒப்புரவு அருட்சாதனம் அங்கு வருகை தந்த குருக்களால் வழங்கி வைக்கப்பட்டது.

தனித்திரு விழித்திரு செபித்திரு என்ற எண்ணக்கருவிற்கு ஏற்ப நள்ளிரவு 12 மணிக்கு ஆயரினால் இறுதி ஆசீர் அருளப்பட்டது.

தகவல்
பங்கு மேய்ப்புப்பணி சபை

## எகெட் கரித்தாஸ் நிறுவனத்திற்கு ACNS குழுவின் வருகை



நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த **ACNS** குழுவின் அங்கத்தவர்களாகிய திருதிருமதி. மார்கோஸ் அவர்கள் எமது நிறுவனத்திற்கு வருகை தந்து எம்மால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை குறிப்பாக பாட்டாளிபுரம் முன்பள்ளி, திரியாய் முன்பள்ளி, De Mello Home மாணவிகள், Glennie home மாணவிகள் மற்றும் Boys Home மாணவர்களையும் சந்தித்ததில் தங்கள் அடைந்த மகிழ்சியையும் எம்மிடம் தெரிவித்து பெற்றனர்.

## வெள்ளைப் போளம்

- ❖ வெள்ளைப் போளம் என்ற தாவரத்தின் பிசின் விலைமதிப்பு மிக்க வாசனைப் பொருளாகும். திருப்பொழிவு எண்ணெய் தயாரிக்க வெள்ளைப்போளம் உபயோகிக்கப்பட்டது. (விப 30:23).
- ❖ ஆடைகளுக்கு நறுமணமூட்டும் வாசனைத் திரவியமாகவும் வெள்ளைப்போளம் பயன்படுத்தப்பட்டன. (திபா 45:8,).
- ❖ மூன்று ஞானிகள் பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம் ஆகியவற்றை இயேசுவுக்கு காணிக்கையாகக் கொடுத்தனர். (மத் 2:11)
- ❖ நிக்கதேம் இயேசுவின் இறந்த உடலை நறுமணமூட்ட வெள்ளைப்போளமும், சந்தனத்தூளும் கொண்டு வந்தார். (யோவா19:39)
திராட்சை இரசத்துடன் வெள்ளைப்போளமும் கலந்து பரிமாறப்பட்டது. (மாற் 15:23)

# திருமணமாம்  திருமணம்

## தேவனே தொடங்கி வைத்த திருமணம்

அவனியிலே அது தான் ஆதித் திருமணம். மானுடத்தின் முதல் பெற்றோரை நிர்ணயித்த முதன்மையான திருமணம் மானுடத்தின் முதல் பெற்றோரை நிர்ணயித்த முதன்மையான திருமணம். அதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் அழகுற ஆக்கி வைத்து விட்டான் ஆண்டவன்.

உலகை ஒளிமயமாக்கினார் முதல் நாளில்!

தண்ணீரைப் பிரித்துத் தரையைத் தளமாக்கியதோடு வான் வெளியைப் படைத்து விரிந்ததொரு பந்தலை அமைத்தார் அடுத்த நாளில்!

மூன்றாம் நாளிலோ குளுமையைத் தரும் பசுமையால் பல தோரணங்களைத் தொங்க விட்டது போன்ற காட்சியை தந்தார்.

நான்காம் நாளில் ஆயிரமாயிரம் அலங்கார விளக்குகளை ஆகாயப் பந்தலிலே பதித்து வைத்தார்.

அடுத்து, உணவிற்கான தயாரிப்புகள் உருவெடுக்கின்றன. பல்வேறு பறவை இனங்கள், கடல்வாழ் உயிரினங்கள், கால்நடைகள், காட்டுவிலங்குகள்! இப்படிப் புரதச் சத்து மிகும் உயர்தர உணவு வகைகளையும் உண்டாக்கித் திருமண விருந்துக்கான முன் தயாரிப்புகளை முடிவுக்குக் கொணர்ந்தார்.

இனி வேண்டியது திருமணத் தம்பத்தியர் தானே இதுவரை ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொரு வகை பொருள்களையும் **"தோன்றுக"** என்றார். அவைகளும் உடனே தோன்றினஅதே பாணியிலே இப்போதும் **"தம்பதியர் தோன்றட்டும்"** என்று கட்டளையிட்டால் அவர்கள் தோன்றாமல் இருப்பாரா? அவரது வார்த்தையின் விலிமை மானுடப் படைப்புக்கு ஒவ்வாமலா போய்விடும்? இல்லவே எல்லாம் வல்ல இறைவனுக்கு இயலாதது எதுவுமே இல்லை எனினும் அவ்விதச் செயல்பாட்டு முறையில் இங்கே இறைவன் இறங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.!


விவிலியத் திரு ஆசிரியர் இங்கே கையாண்டுள்ள இலக்கிய நயம் நம்மை மிகவும் ஆழமாக சிந்திக்கத் தூண்டுகிறது. இது காணும் கையாளப்பட்டுள்ள படைப்பு பற்றிய எழுத்தோவியம் இங்கே ஒரு பெரும் மாற்றம் பெறுகிறது! இதுவரை படைக்கப்பட்டுள்ள எல்லா படைப்புகளையும் ஒரே ஒரு சொல்லில் இறைவன் படைத்து மகிழ்ந்ததார் என்று கூறி வந்தத் திரு ஆசிரியர் இப்போதோ இறைவனை ஆழ்ந்து சிந்தித்துத் தெளிவானஒரு முடிவுக்கு வந்த பிறகே மாந்தரைப் (அதாவது நமது பார்வையில் திருமணத் தம்பதியரை) படைத்தார் என்று குறிப்பிடுவது போன்று தென்படுகின்றது. இது காணும், படைத்த எல்லாப் படைப்புகளையும் "படார் படார்" என பட்டாசு வெடிப்பது போன்று படைத்து முடித்தார். கடவுள் "ஒளி தோன்றுக" என்றார் ஒளி உண்டாயிற்று. அடுத்து "வானம் தோன்றுக" என்றார் உடனே அதுவும் தோன்றியது. அவ்வாறே அனைத்துப் படைப்புகளும். ஆனால் மனிதரை படைக்கப் போகும் போது மட்டும் அவர் ஏதோ ஒரு சிந்தனையில் மூழ்கிப் போய் அதிலிருந்து ஒரு தெளிவைக் கண்டது போலவும் அந்தக் கண்டுபிடிப்பைத் தனக்கு உள்ளேயே செல்லிப் பார்த்துக் கொண்டது போலும் அந்த மாதிரியை முன் வைத்து மனிதரைப் படைத்தது போலவும் விவரிக்கிறார். விவிலியத் திரு ஆசிரியர் (காண் தொநூ 1 : 26 ~ 27)

எத்தனையோ கலைஞர்களைக் கண்டு களித்திருப்போம் நாம் யாராவது ஒரு கலைஞனை இப்போது பார்ப்போமே! அவன் தன் படைப்பாற்றலை பல முறை மிகமிக எளிதாகவே பயன்படுத்தியிருப்பதைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்திருப்போம்! போகிற போக்கிலே பல வார்த்தைகளை ஏதோ உளரு வாயனைப் போல் உதிர்த்திருப்பான் ஒரு கவிக் கலைஞன். அதை அப்படியே எழுதிவிட்டுப் பிறகு நாம் அமைதியாய் அமர்ந்து வாசித்துப் பார்த்தால் தெரியும் அதிலே அடங்கியுள்ள சொல்லழகும் பொருட் செறிவும் இப் பொருள் பொதிந்த சிலேடைச் சொற்களும் எதுகை மோனை இணைந்துள்ள அழகியதொரு வெண்பாவாக அது அமைந்திருக்கும்.

ஆனால் அதே கலைஞன், சற்று அமர்ந்து ஆழ்ந்து சிந்தித்து பிறகு ஒரு தெளிவைத் தேடிக் கண்டடைந்து இறுதியில், "சரி , இதன் மாதிரியிலே இதனை வடித்துத் தரலாம்" என்று தனக்குள்ளேயே பேசிவிட்டுப் பிறகு ஒரு கவிதையை புனைகின்றான் எனின் அந்தக் கவிதையின் கருப்பொருளுக்கு அவன் மிகமிக முக்கியத்துவம் தருகிறான். என்று உணர்வோம். அது மட்டுமல்ல அந்தக் கருபொருளுக்குப் பின்னால் உள்ள பின்புலச் சுழலமைவு எப்படி அமைக்க வேண்டும். என்று யோசித்திருக்கிறார் என்று தெரிய வரும். தவிர அக்கவிதையின் மூலம் தான் கூறவிருக்கும் கருதுகோள் தெளிவுற வெளிபடுமா? என்றெல்லாம் சிந்தத்திருப்பான் என்பதையும் உணர்வோம்இ ஆக கருப்பொருள் காட்சி கருதுகோள் ஆகிய அனைத்துமே ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுக்காக கையாளப்பட்டுள்ளன என்பது தெரியவரும்.

அதே பாணியில்தான் இங்கு நாம் தொநூ 1 : 26 ~ 27ஐ வாசிக்க வேண்டும் இதுவரை படைத்த அனைத்து படைப்புக்களையும் ஒரு சொல்லால் படைத்தது மட்டும் அல்ல அவற்றை "நல்லது" எனக் கண்டு மகிழ்ந்த கடவுள் இப்போது படைப்பனைத்திற்கும் கொடுமுடியாய் திகழவிருக்கும் ஆதித் திருமணத் தம்பதியரை படைப்பதற்கு முன்னதாகச் சற்று தயங்கி சிந்தித்து பிறகு தெளிந்து தேர்ந்து அவர்களுக்கான மாதிரியைத் தமக்குள்ளேயே கண்டறிந்து விட்டது போல "மானுடரைநம் உருவிலும் நம் சாயலிலும் உண்டாக்குவோம். (தொ.நூ1 : 26) என்று தனக்குள்ளேயே திருவாய் மலர்ந்துகொள்வதாக எடுத்துரைக்கிறார் திரு ஆசிரியர். அது மட்டுமல்ல "அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால் நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும். (தொநூ 1 : 26) என்று தனக்குள்ளேயே பேசிக்கொள்வதன் மூலம் இவர் தம் படைப்பின் நோக்கத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறது விவிலியம்.

தொடரும்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி முடிவுகள்

Fr.Nc

**சரியான கவிதை வரிகள்**

- வானவர் கீதங்கள் பாடி மகிழ
- வந்ததே மண்ணிலே விடிவின் ஒளி
- மூன்று திசை ஞானிகளும் ஒன்று சேர
- வழிகாட்ட வானிலே தாரகையாம்
- மாடடைகுடிசையிலே மாபரனார்
- மரியாளின் மகனாக வருகின்றாரே
- ஏழ்மையின் கோலமே ஏற்று வந்தவர்
- எல்லா மனத்திலும் நிலைத்து நின்றாரே

பங்குபற்றியவர்கள் 07 பேர்
சரியாக வடிவமைத்தவர்கள் 04 பேர்
நான்கு பேருக்கும் பரிசுத்தொகை 800/= பகிர்ந்து அளிக்கப்படும்.

பரிசுக்குரியவர்கள்

அனிற்றா ரூஸ்வெல்ட்
இல 19 வைத்தியசாலை வீதி
திருகோணமலை

றொ. எமில்ராஜ்
இல 48 நித்தியபுரி
திருகோணமலை

தே.சமில்டன்
3ம் வட்டாரம்
நிலாவெளி

புளோரிடா ஜேசுதாஸ் நவரட்ணசீலன்
இல 37/6 நீதிமன்ற வீதி வீதி
திருகோணமலை

## கிறிஸ்மஸ் சித்திரப் போட்டி



பங்குபற்றியவர்கள் 02 பேர்

1ம் பரிசு 500/=
றொ. எமில்ராஜ்
இல 48 நித்தியபுரி
திருகோணமலை

2ம் பரிசு 300/=
றொ. டிலக்ஸ்ராஜ்
இல 48 நித்தியபுரி
திருகோணமலை


## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல்

பங்குபற்றியவர்கள் 11 பேர்

1ம் பரிசு 500/=
தே. சமில்டன்
3ம் வட்டாரம்
நிலாவெளி

2ம் பரிசு 300/=
ம. டெவோன்ஷா
அன்னை வேளாங்கன்னி வீதி
பாலையூற்று

3ம் பரிசு 200/=
ஜெ. ஆன்டிலிஷியா
98/2A, உவர்மலை



## விவிலிய வார்த்தைகள் கண்டுபிடித்தல்

பங்குபற்றியவர்கள் 10 பேர்
மிகச் சரியாக விடையளித்தோர் 02 பேர்

1ம் பரிசு 500/=
புளோரிடா ஜேசுதாஸ் நவரட்ணசீலன்
இல 37/6 நீதிமன்ற வீதி
திருகோணமலை

2ம் பரிசு 300/=
தே. சமில்டன்
3ம் வட்டாரம்
நிலாவெளி


## அறிவித்தல்

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் | ~ 2500.00 |
| | 1/2 பக்கம் | ~ 5000.00 |
| கலர் | 1/4 பக்கம் | ~ 3750.00 |
| | 1/2 பக்கம் | ~ 7500.00 |


# சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி


## தூய மத்தேயு


- பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும் போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- 1,2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்
- 1ம் பரிசு - 500/=  2ம் பரிசு - 300/=  3ம் பரிசு - 200/=



பெயர் ..................
முகவரி ..................
பங்கு ..................
முடிவுத் திகதி 25.03.2017

கீழே தரப்பட்டுள்ள படங்கள் அல்லது படங்களில் உள்ள முதல் எழுத்தைக் கொண்டு விவிலிய வார்த்தைகளை கண்டு பிடியுங்கள்




பெயர் ..................
முகவரி ..................
பங்கு ..................
முடிவுத் திகதி 25.03.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய சுவக்கின் அன்னமாள் முதியோர் சங்கத்தினரின் 1ம் ஆண்டு நிறைவு ஒன்றுகூடல்



பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தில் 13. 03. 2006ல் ஆரம்பிக்கப்பட்ட 'தூய சுவக்கீன் அன்னம்மாள் முதியோர் சங்கம்' 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த 17. 12. 2016 நடைபெற்ற ஒன்றுகூடலில் உறுப்பினர்களும், பங்குத்தந்தையும் இணைந்து சிறப்பித்தார்கள்.

திரு.B.F.பாத்லட்
உபதலைவர்

# இயேசுவோடு 12 மணி நேர விசேட நற்கருணை ஆராதனை

தூய வனத்து அந்தோணியார் ஆலயம் செல்வநாயகபுரம்.







# எகெட் கரித்தாஸ் பணியாளர்களின் கிறிஸ்மஸ் குடும்ப ஒன்று கூடல்





# மறையாசிரியர் கருத்தரங்கும் ஆயர் சந்திப்பும்

திருமறைக்கல்வி நடுநிலையத்தால் நடாத்தப்படும் மறையாசிரியருக்கான மாதாந்தக் கருத்தரங்கில் வருடத்தின் முதல் கருத்தமர்வான **'குடும்பமும் அருட்பணிகளும்'** எனும் தொனிப் பொருளில் இருமொழிகளிலும் நடாத்தப்பட்டது. தமிழ் மொழியில் அருட்பணி எச். யூட் யோன்சன் அவர்களும், சகோதர மொழியில் திரு. ஆர். கிறிஸ்ரீறோய் அவர்களாலும் நடாத்தப்பட்டது.

அதன் பின்னர், மறையாசிரியர்களை எமதுமறைமாவட்ட ஆயர் அதி. வண. கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அவர்கள் சந்திக்கும் நிகழ்வு நடைபெற்றது. அவர் தனது உரையில் குடும்பத்தின் பண்புகள் பற்றியும், தமிழ் மக்களின் பிறப்பு வீதத்தின் வீழ்ச்சி பற்றியும் எடுத்துக்கூறியதோடு தமது ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும் இவ்வாண்டு கருப்பொருளுக்க மைய எமது செயற்பாடுகள் அமையவேண்டும் எனவும் மறையாசிரியருக்கு வலியுறுத்திக் கூறினார். இக்கருத்தரங்கிற்கு தமிழ், சிங்களம் உட்பட 110 மறையாசிரியரகள் கலந்துகொண்டனர். ஆயருடைய சந்திப்பின் பின்னர் மறையாசிரியருக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது.























எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் தவக்காலத்தை முன்னிட்டு பங்குகள், ஆணைக்குழுக்கள் மற்றும் கன்னியர் இல்லங்களிலிருந்து வருடாவருடம் சேகரிக்கப்படும் பணமானது எமது மறை மாவட்டத்தின் கீழ் இயங்கும் சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்பட்டுவரும் கைவிடப்பட்ட மற்றும் பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்வி, உணவு போன்ற தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகிறது.

முகாமைத்துவம்
எகெட் கரித்தாஸ், திருகோணமலை.

**ஆண்டவரையே நம்பியிரு; அவரே உன் சார்பில் செயலாற்றுவார் [தி.பா 37:5]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org